தாயகம்

Vl. No. 45 8 Nov 1998

JL
0024, N28 K14
N28 · 1·45
189028

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0

புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—

No. 11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஹு நவம்பர்மீ 8உ [No. 45.

THE REGISTRAR OF BOOKS
20 NOV 1928

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	881
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	883
3.	மேற்கின் இசைகள் A. ஸ்ரீநிவாஸராகவன்	886
4.	சூர்ப்பநகை R. முத்தையர்	887
5.	வானசாஸ்திரம்	889
6.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B. L.	891
7.	தமிழ்ப் பாடம்.	893
8.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	896
9.	வர்த்தமானம்.	899

கலா நிலயம்.

அரசியலும் அரவிந்தரும்.

VI

புருடலேஸ வலீஸ ராகப் புகுந்துரைக்கும் பொது ஜனங்கள் ஒருபால்; அரசிலாப் பிரஜாதிபத்யத்திற்குத் தாமே தலைவரென்று துவக்கும் கன்ஸாலோக்கள் எண்ணிறந்தோர் மறுபால்; என்னின் எய்துநலம் யாவதென்று எளிதிலே உணரலாமே. உலகத்தில் இந்நாள் நடைபெறும் அரசியல் சீர்திருத்த முயற்சியில், ஷேக்ஸ்பியர் குறிப்பிற்காட்டிய இவ்விருதிறத்தோர் தன்மைகளும்,காணக் கண்ணுடையோர்க்கு மலையிலக்காய் நிற்கின்றன. ஆயினும் பற்பலர், தம்பால் தம்மினத்தவர்பால் தம்முடைய நாட்டின்பால் உள்ள ஆர்வத்தால் சிந்தனையைச் செலுத்திச் செய்யத்தக்கன இவையென்று தேராமுன்னம், பின்னாள் சென்றதும் முன்னாள் வருவதும் கருதாது பறந்தெழுந்து கதழ்வதால் குன்று முட்டிய குருவியெனத் திகைப்புற்று அலைபவ ராகின்றனர்.

நன்மை செய்வோரும் செய்யப் படுவோரும் இன்ன தன்மையராக, இனி இவர் நேர்மைசெய்து வைக்க முயல்கின்றதாம் அரசியலின் தன்மையையும் ஸ்ரீ. அரவிந்தர் உதவிகொண்டு சிறிது ஆய்வோம். இக்காலத்துக் குரியவாய் நிகழ்கின்ற நினைவுகளில் முற்றிலும் வாய்மையற்றது யாதெனில், ஆட்சிமுறை அமைப்பினால் மக்களுக்கு நலமேனும் தீமையேனும் எய்தஇயலும் என்னுமோரெண்ணமேயாம். இது ஒருநாளும் உண்மையான கொள்கையன்று. உண்மையல்லாக்கொள்கையால் துன்பம் வந்து பிறப்பதுந் தப்பாது. ஆதலால் இந்நினைவைத் தாங்குவோரும், ஊமைச்சனங்கள் கோடானுகோடிகளுக்குப் பலவகையில் முயன்று 'பிரசாரம்' செய்வோரும், துன்பத்தை வளர்ப்பாரன்றி வேறொன்று செய்வாரென்பது தர்க்கத்திற்கும் தத்துவ உணர்விற்கும் மாறானவோர் சொல்லேயாகும். இந்நாள் ஏழைகள் எண்ணிறந்தோர் ஏழைகளாகவே இருக்கின்றனர். ஏழ்மையிலும் ஏழ்மையடைந்து தவித்து நிற்பவர் எங்குங் காணலாம். இனி, மெய்யாகப் பணம் மிகப் படைத்தபேரும் உளர். எவ்வகையைச் சேர்ந்தவராயினும் அவரவர்க்குரிய துயர் அகன்றபாடில்லை என்பது உலகும் ஊழியும் அறிந்தவோர் பழைய செய்தி. இத்துன்பங்களுக்கிடையே சிற்சிலர் சிற்சில சுகங்களைப் பெற்றிருப்பதாகத் தோன்றலாம். ஆயினும் சுகமும் துக்கமும் உண்மையாய் இருக்குந் தன்மையை அவரவர் தத்தம்வரையில் உள்ளவாறு மதித்துக்கொள்ள வேண்டும். அல்லாக்கால் அவைமற்றவர்பால்தோன்றும் பரிசு பெரும்பான்மை பொய்த்தோற்றமாயிருப்பினும் இருக்கலாம். குடியிருக்கச் சிறுகூரையுமின்றிக் குப்பைமேட்டில் பொங்கித்தின்று தெருவோரத்தில் தூங்குகின்றகுடும்பங்கள் பல,நாகரிகம் முதிர்கின்ற நகரங்கள்தோறும் முதிர்ச்சியின் அளவிற்குத் தக்கபடி மிகமிகக் காணலாம். பரோபகார சிந்தையுடையவர் எல்லாரும் அன்னார் நிலைமை மிகவும் பரிதாபகாரமான தென்றே எண்ணுவர்.

ஆயினும், வீடுடைய மக்களுக்கு வரிக்காரன் வந்தபோது நெஞ்சம் பகீர் என்கின்றதே அந்த ஒரு நாள் நிகழ்விற்கு, வீடில்லா ஏழைகள் ஆயுள் வரையில் படுகின்றார் என மதிக்கின்ற துயரமெல்லாம் ஈடாகுமோ வென்று ஐயம் எஞ்சியே நிற்குமன்றோ. கந்தையே கட்டித் திரிவாரை நோக்கி இரங்குவார், தம் மேலாடையில் இருக்கின்ற சிறியதொரு கிழிசலைப் பிறர் காணுவண்ணம் மறைப்பதற்குப் படுகின்ற பாட்டினை நினைத்துக்கொள்ளல் வேண்டும். அடியெடுத்து வைக்குந்தோறும் விழுவரோ என்று கண்டவர் இரங்கும்படி [illegible]காரர் தம் பாதங்களை முயன்று குறைத்துக்கொள்கின்றனர். அழகென்று அவர்கள் அப்படிச் செய்து கொள்கின்றனர் என்பதை அறியோமாயின், இந்தக் கஷ்டம் அவர்களுக்கு எதனாலெய்திற்றோ வென்று பெரிதும் மனமிரங்குவோம். ஆதலின், ஒரு நிலை, சுகத்தின்பாலதேயோ அல்லது துன்பத்தின்பாலதேயோ என்று பிழையிலாவகை மதிக்க அவரவர், முன் சொன்னபடி தத்தம்வரையில் உணர்ந்துகொள்ள வேண்டுமேயன்றிப் பிறர்பால் அந்நிலையைக் கண்டு ஒருவழித் தேர்தல் மயங்கிய முடிவிற்கும் செயலிற்கும் விளைநிலமாவதுமாகலாம். சில ஆண்டுகளுக்குமுன் பாட்டுக் கச்சேரியொன்றிற்கு எம்மோடு போந்திருந்த ஐந்து வயது மருகன் ஒருவன், கடவாத்தியம் வாசித்தவர் கலைவிரிகோலமாய்க் கடுகடுவெனச் சுளித்தமுகத்தோடு தம் வாத்தியத்தை அடித்தும் எடுத்தும் போட்டும் பிடித்தும் முயன்றதை வெகுநேரம் உற்று நோக்கியிருந்து பின் எமது காதருகில், "இச்சட்டியை உடைக்கப் பாவம், எனிவர் இத்துணைக் கஷ்டப்படுகின்றார். கையும் சிவந்து போயிற்றே. அழவும் அழுகின்றாரே. நானேனும் ஒரு கல்லைக்கொணர்ந்து உடைத்தெறியட்டுமோ?" வென்று கேட்டது இப்பொழுது எமது நினைவிற்கு வருகின்றது. ஐந்திலே அச்சிறுவன் சொன்னானென்றால் ஐம்பதிலும் பலர் கடமுடைக்கக் கற்கள் பொறுக்குவார் பிறதுறைகளில் இலராகார்.

எனவே, இந்நாட்டோர் இவ்வகுப்பினோர் இந்நிலையினோர் படுந்துயர் இவைஇவை யென்றும், அந்நாட்டோர் அவ்வகுப்பினோர் அந்நிலையினோர் அடைந்த சுகம் அவைஅவை யென்றும் பாராட்டாமல் ஒவ்வொருவனும் அவனவன் தன்தன் மனத்தை ஆய்ந்து தன்வரையில் நேர்கின்ற சுகதுக்கங்களுக்கு அரசியல்முறைகளின் அமைப்பு எத்துணையளவு காரணமாய் இருக்கின்றதென்பதைத் தெய்வசாக்ஷியாய்ச் சொல்லட்டும். எள்ளத்தனை காரணம் கண்டேனென்று சொல்வாராயினும் பூதக்கண்ணாடியால் பார்த்திருந்தார் என்றே எண்ணல் வேண்டும். ஏனெனில், சாமுயல் ஜான்ஸன் (Samuel Johnson) போன்ற பொய்யில் காட்சிப் புலமையினோர் அணுவத்தனையேனும் உளதோ வென்று ஐயங்கொண்டிருந்தனர். "வேறெவ்வழியிலும் தம் வஞ்சனைச்சூழ்ச்சி இனிச் செல்லாதென்றுணர்ந்த துன்மார்க்கர்கள் கடைசியாகத் தஞ்சமென்று புகுவதற்கு ஏற்றவிடம் தேசபக்தி என்பதே" என்று விளம்பிய ஜான்ஸன் தான் அரசியல் முறைகளால் விளையக் கூடிய பயனைப்பற்றி நம்பிக்கையற்றவராயிருத்தல் வியப்பாமோ.

அரசியல் அமைப்பும் அதனின்று பிறக்கும் சட்டங்களும் யாது செய்ய இயலும்? வைத்தியசாலைகள் கட்டிவைக்கலாம், நோய் வாராமல் காக்கமுடியுமோ! தண்டனைகள் விதிக்கலாம், குற்றங்களைக் குறைக்கவேனும் இல்லாமற் போக்கவேனும் இயலுமோ! வழக்கைத் தீர்க்கலாம், அது எழாமல் தடுக்கக் கூடுமோ! நிர்க்கதியாயினோர்க்குப் பிடிசோறும் முழுந்துணியும் கொடுக்கவுங் கொடுக்கலாம்; ஏழ்மையை ஒழித்தல் ஆகுமோ! பாடசாலைகள் வைக்கலாம்; மெய்யறிவைப் போதிக்க இயலுமோ! ஆதலின், நோயும் குற்றமும் வழக்கும் ஏழ்மையும் அறியாமையும் இருக்கும்வரையில் வைத்தியசாலையால் சிறைக்கூடங்களால் நியாயத்தலங்களால் கஞ்சித்தொட்டிகளால் பள்ளிக் கட்டிடங்களால் யாவர்தம் துயரும் நீர்ந்ததென எண்ணல் ஒல்லாது. பெரும்பான்மை, எவைகளை விலக்குதற்கென்று இவ்விடங்கள் அமைந்தனவோ அவைகளையே அவை வளர்ப்பதையும் கண்கூடாகக் காண்கின்றோம்.

இம்முடிவு மெய்ப்பது உண்மையென்றாலும் அது "அரசியல் முறைகளின் குறையன்று; அதனை நடத்தி வைப்போர்தம் குறைகளே" என்று எண்ண வேண்டா. இங்குத்தான் நாம் ஸ்ரீ அரவிந்தரின் பொருளுரைகளைத் தொடர்ந்துணர வேண்டும், கூறுவாரவர் :—

"ஆள்கின்ற கருவியைக் கையாள்வோர் அறிவிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்திருந்தாலுங்கூட, அரசியல் என்பது சொல்லுமளவு செய்து வைக்காத கபட வேடமேயாகும் உரையளவில், ஜன சமூகத்திலுள்ள புத்தியும் ஆற்றலும் ஒருங்கு திரண்டு பொது நன்மைக்குப் பயன்படுமாறு அமைந்ததே அரசியல்முறை என்பர். ஆனால், செய்கை வகையிலோ, அரசியல்எந்திரத்தின் அமைப்பு, மேலிற்குவர எவ்வளவு புத்திக்கும் சக்திக்கும் இடம் தருகின்றதோ அவ்வளவுதான் வரக்கூடுமே யல்லாது கிடைக்கக் கூடிய புத்திமான்கள் சாமார்த்தியசாலிகள் அனைவரும் முன் வருதற்கு வழியில்லை. வந்துள சிலரும் அந்த எந்திரத்தாலேயே காரியத்தை நடத்த வேண்டியவர்களாயிருக்கின்றனர். அவ்வெந்திரமே அவர்களுக்குத் தடையாய்ச் சுழல்கின்றது. அதுவுமல்லாமல், அப்படி நடத்தும்போது தம்மோடு மேலெழுந்து மிகுதியாய் வந்துள மடையர்களாலும் சுயநயப் புன்மையோராலும் இடறி அவ்வெந்திரத்தில் தாமே சிக்குண்டு சிதறிப்போதலும் நேர்கின்றது."

* * *

"அரசியல் அமைப்பானது நாட்டினோர்தம் சிறந்தெழுந்த புத்தி யன்று; ஒருவகுப்பினோர் முயற்சியின் தொகுதிதானும் அன்று. ஆய்ந்தறியும் மனமுடைய சிறு பகுதியோர்க்கு அது இடம் அளிப்பதில்லை. அன்னவர் தனியே செய்யும் செயல்களைக் கூடச் சிதைப்பதும் இவ்வரசியலின் செய்கையாகின்றது. தற்காலம் பெருமையுடையதாய்ப் பிற்காலப் பெருமைக்கெல்லாம் வித்தாய மேன்மக்கள் மனமும் தொழிலும் பெரும்பான்மை அரசாங்கத்தால் அடக்கமும் அழிவும் உறுகின்றன."

* * *

"ஆட்சிமுறை யமைப்பானது மூட்டுத்தனமாயும் மொத்தக் கணக்கிலும் விவகரிப்பதன்றி, வேறு வழி அதற்கு எவ்வாறு இயலும்; காலும் கட்டுமின்றி அங்கமெலாம் ஒன்றாய் இணங்கி அறிவிற்கும் உள்ளுணர்விற்கும் ஏற்றபடி செவ்விநோக்கிச் செயல்மாற்றிக்கொள்ளும் தன்மை உயிருடன் வளர்கின்றவைகளுக்கே உரியதாதலால், அது ஆட்சிமுறைக்குப் பொருந்துமெனல் அமையாது. ஏனெனின் அரசியல்அமைப்பு உயிருள்ளதொன்றன்று. அஃதோர் எந்திரமே; ஆதலால் எந்திரத்தைப் போலவே அதுவும், தகவேனும் சுவையேனும் நுண்மையேனும் உணர்வேனு மின்றியே வேலை செய்கின்றது. மாறுட ராற்றவேண்டியது சிருஷ்டியாயிருக்க அது ஆலைத் தொழிலால் செய்து அடுக்குகின்றது."

* * *

இதன்மேல் நாமொன்றும் இயம்ப வேண்டா. அரசியலின் தன்மையையும் அத்தன்மை அது எய்தியதன் காரணத்தையும் ஸ்ரீ அரவிந்தர் காட்டியபடி உணர்ந்துகொள்ள முயல்வதே நலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[865-ம் பக்கத் தொடர்ச்சி]

வேடர் வாடை வீசுதல்.

அம்மட்டோ, சேக்கிழார்பெருமான் வேடர்வாழ்க்கையை அறிந்தபடி! வேடர்களுக்கன்றி மற்றையோருக்கு வெளியாகாத வேட்டையின் நுட்பங்கள் எல்லாவற்றையும் சேக்கிழார் தமது திருவருட் சிறப்பால் செவ்வையாக உணர்ந்து தெளிவாகச் சொல்லிப் போகின்றார். பேஜாட் என்ற சுவையறிபுலவர் தலைசிறந்த பாவாணர்களைப்பற்றிப் பேசிவருகையில் மற்றைய மக்களைப்போலப் பாவாணர்களும் நடந்து வாழ்ந்தாலும் மற்றையோர் கண்ணிருந்தும் குருடராய்க் கண்டதை யுணராது தூங்கிச்சென்று துயரில் மூழ்க, பாவாணர்களோ என்னநேர்ந்தாலும் எதைக்கண்டாலும் அதில் நிறைந்துள்ள இன்பத்தை உள்ளூற உறிஞ்சிக் குடித்துக் களிப்பேறிச் சுவைவெறிகொண்டு பாடல் தேக்கெறிந்து உடலெலாங் கண்ணாய் உலகில் உலவுகின்றனர் எனச் சிறப்பித்துப் புகழ்கின்றார். இதனை விளக்க ஷேக்ஸ்பியர் என்பவர் புனைந்துரைக்கும் வேட்டை ஒன்றினை எடுத்துக் காட்டி, அங்கு, வேட்டை நாய்கள் தன்னைத் துரத்தி வருவதுகண்டு, முயலானது தப்பியோடி ஆட்டுமந்தைக்குள் புகுவதனையும், அம்மந்தைக்குள் புகுந்து மோப்பம் பிடிக்க முடியாது, அந்நாய்கள் திகைப்பதனையும் அந்த ஆங்கிலத் தெய்வப் புலவர் அழகாக விரித்துரைப்பதை மெச்சிப் புகழ்கின்றார். நாட்டுப்புறத்தில் நாளும் நடந்த இந்நுட்பத்தைப் பலர் கண்டும் காணாதிருக்க ஷேக்ஸ்பியர் கண்டு களித்துப் பாட்டாகப் பாடியதைப் பாராட்டுகின்றார். இவ்வேட்டையோ நாட்டுப்புறத்தில் நாளும் நடப்பது. சேக்கிழார் பாடிவரும் வேட்டையோ காட்டிலும் காண்பதரியது. இதனை அறிவது எவ்வளவு அருமை. அவ்வருமையைப் பாராட்டியல்லவா அவரை நாம் தெய்வப் புலவர் என்பது.

வேடர்கள் மானைக்கொண்டு மானைப் பிடிப்பர்; யானையைக்கொண்டு யானையைப் பிடிப்பர். இவ்வாறு விலங்குகளைப் பிடிப்பதற்காகவே பல விலங்குகளைப் பழக்கி வைத்திருப்பர். அவைகளுக்குப் பார்வைவிலங்குகள் என்று பெயர். வேட்டையாடப் புகுவோர் முன்னதாகக் காடெங்கும் ஒற்றர்களை அனுப்புவர். அவர்கள் விலங்குகளின் அடிச்சுவட்டை ஒட்டியே போய் விலங்குகள் இருக்கின்ற நிலையினை அறிந்து வருவர்.

தென்றிசைப் பொருப்புடன் செறிந்தகானின் மானினம்
பன்றிவெம் மரைக்கணங்கள் ஆகியான பல்குலம்
துன்றிநின்ற என்றடிச் சுவட்டினொற்றர் சொல்லவே
வன்றடக்கை வார்கொடெம் மருங்கும்வேடர் ஓடினார்.

அதன்மேல் அவ்விலங்குகள் அடங்கிப் பதுங்கும் இடம் அனைத்தும் அறிந்து அதற்கப்புறத்தே அக்காட்டைச் சுற்றிலும் வலையை விரிப்பர். தப்பித்தவறி வெளியோடத் தொடங்கினால் அவ்வலைக்குள்ளே வீழ்ந்து சிக்கிக் கொள்ள வேண்டுவதுதான்.

ஓடியெறிந்து வாரொழுக்கி யோசனைப் பரப்பெலாம்
நெடியதிண் வலைத்தொடக்கு நீளிடைப் பிணித்துநேர்
கடிகொளப் பரந்தகாடு காவல்செய் தமைத்தபின் [னார்.
செடிதலைச் சிலைக்கைவேடர் திண்ணனார்முன் நண்ணி

பின்னர், நாய்களைக் குறுக்கும்நெடுக்குமாக ஓடவிட்டு விலங்குகளை எழுப்பி அலைக்கழிக்கச் செய்வர்.

வெஞ்சிலைக்கை வீரனும் வேடரோடு கூடிமுன்
மஞ்சலைக்கு மாமலைச் சரிப்புறத்து வந்தமா
அஞ்சுவித் தடர்க்குநாய்கள் அட்டமாக விட்டுநீள்
செஞ்சரத்தி னொடுசூழல் செய்தகானுள் எய்தினார்.
கோடுமுன் பொலிக்கவும் குறுங்கணு குளிக்குல
மாடுசென் றிசைப்பவும் மருங்குபம்பை கொட்டவும்
சேடுகொண்ட கைவிளிச் சிறந்தஓசை செல்லவும்
காடுகொண் டெழுந்தவேடு கைவளைந்து சென்றதே.

துடி பம்பை முதலியனவற்றைக் கொட்டி முழக்குவர். கைதட்டி ஓசை எழுப்புவர். இவ்வோசைகளைக் கேட்ட விலங்குகள், திடுக்கிட் டெழுந்து திகைப்புல் மிதித்தாற்போலச் செய்வதறியாது தயங்கி அங்கு மிங்கும் ஓடத் தலைப்பட்டால் அம்பு விட்டுக் கொன்று குவிப்பர்.

வெய்யமா எழுப்பஎவி வெற்பராயம் ஓடிநேர்
எய்யும்வாளி முன்தெரிந்து கொண்டுசெல்ல எங்கணும்
மொய்குரற் றுடிக்குலங்கள் பம்பைமுன் சிலைத்தெழக்
கைவிளித் ததிர்த்துமா எழுப்பினார்கள் கானெலாம்.
ஏனமோடு மானினங்கள் எண்குதிண் கலைக்குலம்
கானமேதி யானைவெம் புலிக்கணங்கள் கான்மரை
ஆனமா அநேகமா மருண்டெழுந்து பாயமுன்
சேனைவேடர் மேலடர்ந்து சீறியம்பின் நூறினார்.

பன்றியானது ஓடிப்போய்ச் சுற்றுவழியில் சிக்கிக்கொண்டு திக்குமுக்கலாடித் திகைத்து நிற்பதையும், அங்கு அதனை அவ்வேடர் குத்திக் கொல்வதனையும் சேக்கிழார் கூறிப் போகின்றார்.

குன்றியைநிகா முன்செறவெரி கொடுவிழியிடி குரனீள்
பன்றியுமடல் வன்றிறலொடு படர்நெறிநெடி தோடித்
துன்றியதொரு குன்றடிவரை சலவியநெறி சூழல்
சென்றதனிடை நின்றதுவலி தெருமாமர நிரையில்.
அத்தருவளர் சுழலிடையடை அதனிலையறி பவர்முன்
கைத்தெரிகணை யினிலடுவது கருதலர்விசை கடுகி
மொய்த்தெழுசுடர் விடுசுரிகையை முனைபெறஎதிர் உருகுத்தினருடன் முறிபடஎறி குலமறவர்கள் தலைவர். [விக்

சலவிய நெறி சூழல்போய் விலங்குகள் சிக்கிக் கொள்வதை எத்துணை நாள் வேடரொடு பழகி அறிந்துணர்ந்தாரோ? நாய்கள் விலங்குகளை அலக்கழிப்பதனை அழகாகப் புனைந்துரைக்கின்றார்,

பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலையற நுழைமா
உலமொடுபடர் வனதகையுற உறுசினமொடு கவர்நாய்
நிலவியஇரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமனனிடைதடைசெய்த பொறிகளினளவுனவே.

விலங்குகள் அம்புபட்டு விழுவதனையும், உடல் துள்ளுவதனையும், ஒன்றின்மேல் பாய்ந்த அம்பு உருவிச் சென்று வேறொன்றின்மேற் பாய்வதனையும் பன்முறையும் எடுத்துச் சொல்கின்றார். மற்றைய வேட்டைவினை விறலினையும் அழகாகப் பாடுகின்றார்.

தாளறுவன விடைதுணிவன தலைதுமிவன கலைமா
வாளிகளொடு குடல்சொரிதர மறிவனசில மரைமா
நீளுடல்விடு சரமுருவிட நிமிர்வனமிடை கடமா
மீளிகொள்கணை படமுடலெழ விழுவனபல உழையே.
வெங்கணைபடு பிடர்கிழிபட விசையுருவிய கயவாய்
செங்கனல்விட அதனொடுகணை செறியமுனிரு கருமா

அங்கெழுசிர முருவியபொழு தடலெயிறுற அதனைப்
பொங்கியசின மொடுகவர்வன புரைவனசில புலிகள்.

பின்மறவர்கள் விடுபகழிகள் பிறகுறவயி றிடைபோய்
முன்னடுமுகம் விசையுருவிட முடுகியவிசை யுடனக்
கொன்முனையடு சரமினமெதிர் குறுகியமுக முருவக்
தன்னெதிர்எதிர் பொருவனகிர் தலையனபல கலைகள்.
கருவரையொரு தனுவொடுவிசை கடுகியதெனமுனைநேர்
குரிசின்முன்விடு மடுசரமெதிர்கொலைபயில்பொழு தவை
பொருகரியொடுசினவரியிடைபுரையறவுடல்புகலால்[யே
வருமரவொடு பகலனைவன எனமிடையுமவ் வனமே.
நீளிடைவிசைமிசைகுதிகொள நெடுமுகிறொடஎழுமான்
தாளுறுகழன் மறவர்கள்விடு சரங்கரைதொடர் வனதாம்
வாள்விடுகதிர் மதிபிரிவுற வருமெனவிழும் உழையைக்
கோளொடுபயில்பணிதொடர்நிலைகொளவுளஎதிர்பலவே.
கடல்விரிபுனல் கொளவிழுவன கருமுகிலென நிரையே
படர்வொடுசெறி தழைபொதுளிய பயில்புதல்வன மதன்
அடலுறுசர முடலுறவரை அடியிடமல மாலான் [மேல்
மிடைகருமரை காடிகளோடு விழுவனவன மேதி.

வேட்டையிலும் நெளிவுசுளுவுகள் உள்ளன என்பதை நன்கறிந்துள்ளார் நமது சேக்கிழார். அவற்றை ''வேட்டை வினைத்தொழில் விரகு'' என்று பேசுகின்றார். வேட்டை யாடுவதற்குத் தகுந்த போதும் ஒன்று உண்டென்கின்றார். ''உருமிகத் தெரியாப்போதே'' சிறந்ததென உளவு அறிந்தவர் உரைத்துப்போகின்றார்.

ஏறுகாற் பன்றி யோடு இருங்கலை புனமான் மற்றும்
வேறுவே றினங்கள் வேட்டை வினைத்தொழில் விரகி
[ைேல
ஊறுசெய் காலஞ் சிந்தித் துருமிகத் தெரியாப்போதின்
மாறடு சிலையும் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார்.

இவ்வேட்டை வினை விரகெல்லாவற்றையும் இரண்டு பாட்டில் அடக்கி அழகாகப் பாடுகின்றார்.

திருமலையின் புறம்போன திண்ணனூர் செறிதுறுகற்
பெருமலைக ளிடைச்சரியிற் பெரும்பன்றி புனமேய்ந்து
வருவனவும் துணிபடுத்து மானினங்கள் கானிடையின்
ஒருவழிச்சென் றேறுதுறை ஒளிநின்று கொன்றருளி
பயில்விளியாற் கலையழைத்துப் பாடுபெற வடுருவும்
அயில்முகவெங் கணைபோக்கி அடிஒற்றி மரைஇனங்கள்
துயிலிடையிற் கிடைஎய்து தொடர்ந்துகடமைகள்எய்து
வெயில்படுவெங் கதிர்முதிரத் தனிவேட்டை வினைமுடித்
[தார்.

வேட்டை யாடுவதற்குத்தகுந்த போது கண்டறிந்தாற் போலத் தகுந்த இடத்தினையும் கண்டறிந்துள்ளார். பன்றிகள் இரவெல்லாம் புனங்களில மேய்ந்து பொழுது புலர்வதன்முன்னம் திரும்பிவரும் வழியில்நின்று அவற்றைக் கொல்வது மிக எளிது. மான்கள் மர்லதமர்ந்தையாகப் போய்த் திரும்பித் தண்ணீர் குடிக்கவருந் துறையருகே மறைந்திருந்து கொல்வது மிக எளிது. அல்லது அவைகளது அடிச்சுவட்டைக் கண்டுகொண்டே போய் அவை தூங்கும் இடத்தில் அவற்றினை எளிதில் கொல்லலாம். விலங்குகளைப்போலக் கூவி யழைத்தால் அவை மயங்கி ஓடி வருகையில் ஒன்றைப்போலப் பலவற்றையும் கொன்று குவிக்கலாம். பயில்விளியாலும் கைவிளியாலும் பம்பை ஒலியாலும் விலங்குகளை எழுப்புவதும் வேட்டை நுட்பமாகும். நாகர் என்ற பழங்குடிகள் இப்போதும் இரவில் தீவற்றி ஏற்றிப் பிடித்து மணியடித்து நிற்கையில் அம்மணியோசை கேட்டு ஓடிவரும் மான்களைப் பிடித்துக்கொள்கின்றனராம். முயலானது மர்தையிற் பதுங்குவது என்ற ஒரு வேட்டை நுட்பத்தைக் குறித்தமைபற்றி ஷேக்ஸ்பியரை அவ்வளவு உயர்வாகச் சிறப்பித்துப் பேஜாட் புகழ்வாரானுல் வேட்டையாடும் வழிமுறையை எல்லாம் நன்கெடுத்துப் பாடிய சேக்கிழாரை நாம் புகழவேண்டாமா? போற்ற வேண்டாமா?

தகுதி இருந்தவாறு ஐயன்ளேயோ! கூறுவதொவ்வொன்றினையும் கதைக்குத் தகுந்தவாறே கூறிப் போகின்றார். இதற்கு இது தக்கது என்று ஆய்ந்து ஆய்ந்து சொற்களையும் பொருள்களையும் பொறுக்கித் தேர்ந்தெடுக்கின்றார். அவர் காட்டும் உவமைகளும் அவ்வாறே அவ்வவ்விடத்திற்குத் தகுந்தனவாய் அவ்வப் பொருளை விளக்க இன்றியமையாதவாய்ச் சுவையோடு அழகுடையனவாய்த் தலைசிறந்து விளங்குகின்றன. பழைய வழக்கப்படி பழங்கதை உவமைகள் சில இவரது நூலில் பயின்று வருகின்றன. அவை தலைசிறந்தன வல்லவாயினும் அவ்வவ்விடத்திற்கு ஏற்புடையனவாய் இனிமை பயக்கின்றன. கரிய வேடர்கள் அடர்ந்திருண்ட காட்டிற்குள்ளே வேட்டையாடும்பொருட்டு ஒ என இரைந்துகொண்டு போதல் கருங்கடலில் போய்க் கலக்கும் காளிந்தி என்னும் கரிய ஆறுபோல இருந்தது என்கின்றார்.

நெருங்குபைங் தருக்குலங்கள் நீடுகாடு கூடநேர்
வருங்கருஞ் சிலைத்தடக்கை மானவேடர் சேனைதான்
பொருந்தடங் திரைக்கடற் பரப்பிடைப் புகும்பெருங்
கருந்தரங்க நீள்புனற் களிந்திகன்னி ஒத்ததே.

காளிந்தியைக் கரியபேர் ஆறுஎன்பது நூன்மரபு. செக்கச் சிவந்த நாக்கினை நீட்டிக்கொண்டு பெரிய வேட்டை நாய்கள் வேடர்களது அண்டையிலே ஓடுவதைக் கண்டு வெற்றிமங்கையானவள் வேடர்களது தோள்மேலே தங்கிக் காலையாட்டிக் கொண்டு போகின்றதை நினைத்துக் கொள்கின்றார், அவ்வெற்றி மங்கையின் செவ்விய திருவடிபோலத் திகழ்கின்றன அவ்வேட்டை நாய்களின் நீண்ட நாக்குகள் என்று புனைந்துரைக்கின்றார்.

வன்றொடர்ப் பிணித்தபாசம் வன்கைமள்ளர் கொள்ள
வென்றிமங்கை வேடர்வில்லின் மீதுமேவு பாதமுன் [வே
சென்றுமீளு மாறுபோல்வ செய்யநாவின் வாயவாய்
ஒன்றொடொன்று நேர்படாமல் ஓடுநாய்கள் மாடெலாம்.

திருக்காளத்தி மலையிலே இரவில் முத்துக்கள் ஒருபுறம் நிலவுமிழ்கின்றன. அரவின் மணிகள் மற்றொருபுறம் தீயுமிழ்கின்றன. நிலவிலாத உவாநாளில் ஞாயிறும் திங்களும் ஒன்றாக உலவுவர் என்பது புலனறி வழக்கு. இதனை உள்ளத்தே கொண்டு,

கழைசொரி தரளக் குன்றிற் கதிர்நில வொருபாற் பொங்க
முழையரா வுமிழ்ந்த செய்ய மணிவெயில் ஒருபான் மொய்
தழைகதிர்ப் பரிதியோடும் சந்திரன் தலையுவாவிற் [ப்பத்
குழையணி காதர் வெற்புக் கும்பிடச் சென்றால் ஒக்கும்.

என்கின்றார். இவற்றினை நூன்மரபினை அறிந்தவர்கள் தாம் கேட்டு மகிழ்தல் கூடும். வேற்று நாட்டார்க்கு விளங்குவதரிது. இனி இந்நூன்மரபினையும்கூட அழகுபடச் சேக்கிழார் சில இடங்களில் புனைந்துரைத்துள்ளார். அவ்விடங்களில் அவை பழையனவாய்த் தோன்றாமல் புத்துயிர்பெற்று விளங்குகின்றன. திண்ணனார் இறைச்சியைச் சுவைபார்க்கின்றார். கடவுளர் அனைவரும் வேள்வி வாயிலாகத் தீக்கடவுளின் நாவில் இட்டவற்றைத் தானே உண்கின்றார்கள். எனவே, கடவுளரது கடவுளும், தீக்கடவுளினும் புனிதமாய திண்ணனாரின் நாவில் இட்ட நல்லிறைச்சியை உண்டு மகிழ்வதில் என்ன இழிவு?

எண்ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டூட்டும்
வண்ணஎரி வாயின்கண் வைத்ததெனக் காளத்தி
அண்ணலார்க் காம்பரிசு தாம்சோதித் தமைப்பார்போல்
திண்ணனார் திருவாயில் அமைத்தார் ஊன்திருவமுது.

சிவபெருமானது திருமுடியின் மீதுள்ள பூக்களைச் செருப்பணிந்த திருவடியால் திண்ணனார் உதைத்துத் தள்ளுவதற் கேற்ற உவமையாக முருகப் பெருமான் தவழ்ந்தலவும் குழந்தையாய்த் தந்தையிடம் விளையாடி அவரை உவப்போடு உதைப்பதையே கூறுகின்றார். இந்தச் சிறந்த உவமையைச் சிவபெருமானே கூறுகின்றார். முருகப் பெருமானின் செங்கால் தந்த இன்பத்தைச் சிவனலாது வேறு யார் கூறுவர். அவ்வகையாலும் அவ்வுவமை தகுதியுடையதாதல் காண்க. கண்ணப்பரது திருவாய் நீர் கங்கையினும் தூய்மையானது என்கின்றார். கங்கையோ சானு என்னும் முனிவரின் செவிவழியாக வந்த எச்சில். திருவாய் நீர் திண்ணனாரின் வாய்வழி வந்த எச்சில். முன்னது பெரியாரது வேள்வியை அழிக்கவந்தது. பின்னது கடவுளின் திருமேனியைச் சீராட்டிப் பாராட்டி நீராட்டி வளர்க்க வந்தது. இதை விட்டால் வேறெந்த உவமையை எடுத்துரைக்க இயலும். இனிச் சேக்கிழார் மெய்யறிவார், அறிந்தவற்றையும் உவமையாகக் கூறுகின்றார். அறிந்ததுகொண்டு அறியாதவற்றை விளக்கவே உவமை வேண்டியிரா நின்றது. அவ்வாறிருக்கப் பலரும் அறியாத நூலில்கண்ட நுட்பமான உண்மைகளை உவமை ஆக்குவதென்றால் பயனிலதாய் முடியும். பயன் பெறுவதோ அருமையினும் அருமை; அவ்வருமை சேக்கிழாருக்கு எளியதொன்றாயது. அத்தகைய உவமைகளை அனைவரும் அறியுமாறு அமைத்துள்ளது மெச்சத் தகுந்ததே. அவ்வுவமையை விட்டால் வேறோர் உவமையும் அவ்விடத்திற்கு ஏலாது என்று எல்லோரும் எண்ணுகின்றனர். கடவுளிடம் போகக் கண்ணப்பர் காளத்தி மலையின் மீதேறுகின்றார். அதனைப் புனைந்துரைக்க

பேணு தத்துவங்கள் எனும் பெருகு சோபானமேறி
ஆணையாம் சிவனைக்காண, அணைபவர் போல்''

என்ற உவமையைக் கண்டறிந்து கூறுகின்றார். வலையின்நின்றும் தப்பியோடும் விலங்குகளைத் துரத்தி வந்து மறுபடியும் வலையினுள்ளே சிக்கவிடும் நாய்களுக்கு உவமையாக நல்லவழியிற் செல்லும் உள்ளத்தை ஈர்த்து வந்து இருவினையாகிய வலையினுள்ளே சிக்கவிடும் பொறிகளைக் கண்டுணர்ந்து கூறுகின்றார். ''பலதுறைகளின்'' என்று மேலெடுத்துக் காட்டிய செய்யுளைக் காண்க.

இதனினும் வேறெந்தஉவமை இவ்விடத்திற்குத்தகுதியுடையதாகும்.

இவ்வுவமைகளே யல்லாது எல்லோரும் உணர்ந்து இன்பமுறக் கூடிய உவமைகள்பல கூறிக்கொண்டே போகின்றார். பான்மதி உவரி ஈன்றதைப் பற்றியும், வங்கினைப் பற்றிச்செல்லா வல்லுடும்பினைப் பற்றியும், கருவரை காளமேகம் ஏந்துவதைப் பற்றியும், செங்கண்வயக் கோளரியைப் பற்றியும், மடங்கலைப் போல்வாளைக்குறித்தும், சூரிப்பிணவு போல்வாளைக் குறித்தும், பானற்குலமாமலரிற் படர் சோதியாரைக் குறித்தும் வேதகத் திருப்பு பொன்னுவதைக் குறித்தும் இனத்திடைப் பிரிந்த செங்கணேறெனப் பெருக் கொண்டெய்துவதைக் குறித்தும், விட்டகருந்திரை எடுத்துக் கைகாட்டுவான் போலக் கதிர் காட்டிக் கதிரவன் எழுவதைக் குறித்தும் முன்னரே பேசியுள்ளோம். அவற்றின் அருமை பெருமையைப் பாராட்டி அருட் கடலில் திளைத்துள்ளோம். பலவகையான மணிகளினிடையே நீல மணியும் பச்சை மணியும் இருப்பதனை,

விரவுபன் மணிகள் கான்ற விரிசுடர்ப் படலை பொங்க
மரகத மொளிகொள் நீல மணிகளும் இமைக்கும் சோதி
பொரவிரு சுடருக் கஞ்சிப் போயின புடைகள் தோறும்
இரவிருள் ஒதுங்கினலே போன்றுள தெங்கும் எங்கும்

என்று அழகுபடப் புனைந்துரைக்கின்றார்.

இவ்வுவமைகள் பொருத்தமானவை என்பதொன்றேயல்ல. இடத்தையும் காலத்தையும் பேசுவோரையும் நோக்கி அவரவர்க்கும் அஃததற்கும் தக்கவாறு உவமை கொண்ட நயந்தான் போற்றிப் புகழத் தக்கது. சிவபெருமான் முருகனை உவமை கூறுவதும் நாணன் உடும்பினை உவமை கொள்வதும், தகுதியுடையவையன்றோ? கண்ணப்பருக் கெதிரே கதிரவன் எழுவதைக் கண்டு கருந்திரை எடுத்துக் கை காட்டுவதாகச் சிறப்பிப்பதும் அவ்விடத்திற்கு மிகப் பொருத்த முடையதாகும். சேக்கிழார் திருத்தி யமைத்த உவமைகளில் மற்றொரு சிறப்பும் உண்டு. அவ்வுவமைகள் அவ்வவ் விடத்திற்கு வேண்டிய உள்ளக்கிளர்ச்சியையும் உண்டுபண்ணுகின்றன. வெறும் வண்ணவுவமமும் வடிவ உவமமும், பண்புவமமும் வினையுவமமுமாக நில்லாது சுவையுவமமாகவும் விளங்குகின்றன. உவமையிலும் பொருளிலும் ஒரு சுவையே உள்ளூறி இனிக்குமாறு உரைத்துப் போகின்றார். நாகன் கரியன் என்பதற்கு அடுப்புக் கரியையும் உவமை கூறலாம், அண்டங்காக்கையையும் கூறலாம். ஆனால் அளக்கலாகா அளவும் பெருமையும் துளக்கலாகாத தோற்றமும் உடைய நாகனுக்குக் கருவரையைப்போல அத்துணைச் சிறந்த உவமையாகாமை காண்க. கருவரையைக் கண்ட விடத்துப் பிறக்கும் பெருமிதச்சுவையே நாகனைக் கண்ட விடத்தும் பிறத்தல் காண்க. இந்தச் சுவையில் ஒற்றுமை நயம் இல்லாதவழி உவமை உவமையாவதில்லை பெரும் புலவர்களும் இந்நுணுக்கம் அறியாது இடர்ப்படக் காண்கின்றோம். வில்லிபுத்தூரார் முனிவரைப் புகழ முசுக் குலத்தினை உவமை கொண்டதைப்பற்றி என்னசொல்வோம் (குருகுல 65). வருணனைக் கண்டு இடி எனச் சினந் தெழுந்து உருமும் முனிவர் ''பார் செய்த பெரும் பேறெனப் போய்ப்பிறந்திடு'' எனறு மகிழ்ந்து உருமுவதாக வில்லியார் கூறிப்போகின்றார் (குருகுல 59). அந்தணர் மாலைக்கடன் கழித்து நீரிறைப்பதைக் கண்டு போரை நினைத்துக்கொண்டு அந்திவானத்தைக் குருதி பொங்கி வழியும் போர்க்களம் என்கின்றார். (கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 86). இவ்விடங்களில் இடத்திற்குத் தகுந்த சுவை இல்லாது போதல் காண்க. சேக்கிழாரது உவமைகள் எத்தகையன? பின்னும் பின்னும் பன்னிப் பன்னிப் பேச வேண்டுவதில்லை. எல்லா உவமைகளும் சுவையொடு விளங்குதலை அவற்றைக் கூர்ந்து எண்ணுவோர் எளிதில் உணர்வர். கண்ணப்பர் பிறந்ததைக் கூறுவார் ''பான்மதி உவரி ஈன்றால் என'' என்று உவமை காண்கின்றார். கடலிடத்தே திங்களைக் கண்டால் என்ன உவகை பூக்குமோ அதே உவகை கண்ணப்பரை வேடரிடையே கண்டபோதும் உண்டாகாதோ உவர்ப்புள்ள இடத்தே ஒளிப்பிழம்பு எழுந்த உண்மையையும் குறிக்கின்றார். இன்னும் விரிக்கிற் பெருகும்.

எனவே, சேக்கிழார்பெருமான் தமது கதையின் முடிவிற் கேற்பக் கதையினையும், பொருளினையும், பாட்டினையும் உவமையினையும், சொற்களையும், சுவையினையும் திருத்தி அமைத்துப் பாடியுள்ளனர் என்பது வெள்ளிடை மலைபோல விளங்குகின்றது. கதையின் ஒவ்வோர் உறுப்பினையும் கதையின் உட்கோளை எண்ணியே உருப்படுத்தி உயிர் கொடுக்கின்றார். பாட்டின் போக்கும் அவ்வவர் நிலைக்கும் அவ்வவ்விடத்திற்கும் ஏற்றவாறு மாறிமாறிப் போகின்றது. சொற்போக்கும் அப்படியே. உவமைகளும் தகுதி பார்த்து ஆய்ந்து ஆய்ந்து பொறுக்கியவை. ஆகவே சேக்கிழார் பாடியதில் ஒரு சொல்லையேனும் நீக்கி வேறு சொல்லொன்று அவ்விடத்தில் அமைக்க முடியாதபடி அவ்வளவு பொருத்தமாகத் தம் கதையைப் பாடி முடித்துள்ளார். இவ்வாறு எல்லாப் புலவர்களையும் புகழமுடியாதெனச் சொல்லவும் வேண்டுமோ? தெய்வப் புலவர்களே இங்ஙனம் பாடவல்லவர்கள்.

T. P. மீனுக்ஷிசுந்தரன்.

மேற்கின் இசைஞர்

மணிகளினொலி

மனித வுள்ளமெனும் யாழிருந் தெழும் ஸ்வரங்கள் இன்னதன்மையென வெனவும், அவை ஒன்றோ டொன்று தம்முட்பொருந்திச் சமைக்கும் இசைகளும், முரண்பட்டிழைக்கும் ஒலமும் கலந்து வயங்கும் வாழ்வின் மருமம் யாதென்பதும், கவிதையானது விளக்குகின்றது. இவ்விளக்கத்தைத் தனது கருமமாகக் கொண்ட கவிஞன், மனித வுள்ளத்தின் தன்மையும், வாழ்வின் உட்பொருளுந் தானறிந்தவரையில் இவையிவை யென்று சொல்வதோடுமட்டும் நில்லாது, அவ்வுளத்தின் இன்மையையும் வாழ்வின் பயனையும் வளர்ப்பது சாத்தியமென்றும், அவ்வாறு வளர்க்கின், உலகம் கடைத்தேறிப் பொலிவ தெவ்வா றென்றுங் கனவு காண்பான். கனவுக ளிவையெலாங் கவிதைக்கே தனவென்று உலகம் சொல்லும்; மதியாது நிற்கும்; பழிச்சொல் பகரும். கவிஞனோ, இதனால் மனந்தளர்ப மெய்துபவனல்லன். தனது பாவினிசையிலுங், காணும் பெருங் கனவிலும் அவன் அளவிலா நம்பிக்கை பெறுவான். கேவலம் இசை வலவன், கனவு வாணிகன், என்ற சொற்களை இகழ்ச்சிகளாக நினையாது, தனது புகழை யளவிடுங் கட்டிய மொழிகளாகவே கருதி, ஓஷானஸி யென்ற ஆங்கிலக் கவியைப்போல், பெருமிதந் ததும்ப மனமகிழ்வான். சொல்வன் ஓஷானஸி :—

“தனியே யலைகின்ற தரங்கத் தயலிலே யலைந்தும், மனித சஞ்சாரமற்ற சிற்றாறுகளின் பக்கத் தமர்ந்தும் இசை யெழுப்புவோர் யாமே; அன்றி, கனவுகள் காண்போரும் யாமே. உலக மிழந்தோம், உலகந் துறந்தோம்—எம்மேல் வீசுவது மங்கிய நிலவே. ஆயினும், என்றென்றும், உலகை யசைப்போரும் ஆட்டுவோரும் யாமே யாவோம்”

உண்மையே, கடலின் கம்பீர அழகிலும், சிற்றாறுகளின் தனிமையிலும், கவிஞ ஞாழ்கிறான்; பகலொளி வீசும் செய்கையென்ற தேயம் நீங்கி, நிலவொளி தங்கும் சிந்தனை நாட்டை யடைகிறான். ஆகவே உலகை யிழக்கிறான், உலகந் துறக்கிறான். ஆனால்,

“அழிவிலா அதிசயப் பாக்களால் உலகின் நகர்களை யெழுப்புவோம். கட்டிய பழங்கதை யொன்றினால் சக்கரப் பெருமையைக் கட்டுவோம். கனவொன்றைக் கையிலேந்திச் செல்லுவன் எம்மிலொருவன் வெல்லுவன் மௌலி யொன்றை. புதியதொரு பாவின் சந்தத்து வலிமையால் மிதிக்கலா மரசு ஒன்றை.”

மேலெழுந்தவாறாக நோக்கினால், இவ்வார்த்தைகள், தனது தொழிலைப்புகழுந் தொழிலாளியின் பிதற்றலாகத் தோன்றலாம்; ஊன்றிப் பார்த்தாலோ, அவைகள் உண்மைத் தத்துவமென்பது விளங்கும். நகர்களை யெழுப்புவதும், ஏக சக்ராதிபத்ய மியக்குவதும், 'அரசியலொன்று புதிதாகப் பிறப்பதும், அரசியலொன்று அழிந்து பழங்கதை யாவதும் மனிதனுடைய செய்கைகள். ஆனால், மனிதன் சாதித்துள்ள பெருஞ்செயல் ஒவ்வொன்றும் முதன்முதலில் அவன் மனதிலேயே உருவம் பெறுகிறது; பின்பு, ஆவல் என்ற தூண்டுகோலின் பலத்தால், வெளிப்படையான செயலாகிறது. கனவுகள் காண்பதும், அவைகளை நம்புவதும், நனவுகளாக அவைகளை மாற்ற முயல்வதும் மனித சமூக மீடுபடுகின்ற தீராத பெருந்தொழில். காலச்சக்கரஞ் சுழலச் சுழலப் புதிய கனவுகளும், புது நம்பிக்கைகளும், புதிய செய்கைகளுந் தோன்றித் தோன்றி மறைவன. ஓஷானஸி சொல்வதுபோல் “ஒவ்வொரு தலைமுறையும், அழியுங் கனவோ அன்றிப் பிறக்குங் கனவோ, இவ்விரண்டிலொன்றே”.

எனவே, ஒவ்வொரு தலைமுறையிலும், மனிதசமூகமியற்றுஞ் செயல்களின் பெருமையும், வன்மையும், நன்மையும், அச்செயல்களின் மூலாதாரமான கனவின் அழகையுந் தெளிவையும் பொறுத்துள்ளன. தூய்மையான ஆன்ம பலத்தை அக்கனவு தனது அடிப்படையாகக் கொண்டதாயின் அதை நம்பும் மனிதர்குழாம், அதை நனவாக்க முயலும்போதும், முயற்சியிலொரு சிறிதேனும் வெற்றி பெறும்போதும், அடைகின்ற பெரும்பயனளவிடற் பாலதோ? அன்றி, வெறுப்பிலும் பொறாமையிலும் மடமையிலும் பிறந்த தீயதொரு கனவாயின் அதன்மேல் நம்பிக்கைவைத்துச் செய்கையிலிறங்கும் மனித னிழிகின்ற எம்மை சொல்லவும் படுமோ? உண்மைக் கவியினுடைய கனவுகள் யாவும் உறவாடத் தகுந்தன. ஏனெனில் மனிதவுள்ளத் தழகிலிருந்தும், இயற்கை வனப்பிலிருந்தும் அவைகள் பிழியப்பட்டுள்ளன. இதனால், மனிதனுடைய குறைகளையும், மனிதசமூகத்துள்ள தீதையும், கவிஞ னறியானென்று சொல்லவொண்ணாது. மனிதனுடைய பெருமையைப் பாராட்டுவதால் அவனுடைய குற்றங்களை யறிய முடியாமற் போகாது; இயற்கை வனப்பை மாந்துவதால் மனித சமூகத்துள்ள தீமைகள் புல னாகாமலிரா. நன்மையை யறிந்துள்ளதுபோல் தீமையையுங் கவிஞ னறிவான். அறிந்து, அத்தீமையைக் களைந்தெறியவே தனதழகிய கனவுகளை யெழுப்புவன்; நம்மை நம்பி நலம்பெற வேண்டுவன்; மற்றவை வேண்டிலன், உலகமிழப்பன், உலகந் துறப்பன்; ஆனால், உலகமுய்வதே கருதுவன்.

இத்தகைய கனவுகள் பல ஒவ்வொரு இலக்கியத்திலுங் காணலாம். கம்பன தயோத்திமாநகர் ஓர் அழகிய கனவு. சிலப்பதிகாரப் பூம்புகார் மற்றொரு கனவு. பரஞ்சோதி முனிவரின் மதுரையும், வில்லிபுத்தூரார் இந்திரப் பிரத்தமும், தருமனும் வேறுசில கனவுகள். புகழேந்தியின் நிடதநாடும், மாவிந்தமும், நளனுந் தமயந்தியும் கனவுகள், கனவுகளே. ஆங்கிலத்தில், ஷெல்லியின் “சிறைமீண்ட ப்ரோமீதியஸ்” ஸும், ஷேக்ஸ்பியரின் டெஸ்டிமோனாவும், வர்ஜிலியாவும் போர்ஷியாவும், பிரஞ்சில் ரூஸோவென்ற தத்துவ ஞானியின் “இயற்கைத் தத்துவமும்” ருஷிய விலக்கியத்தில் டால்ஸ்டாயின் சிறுகதைகளுள் “மடயன் இவான்” என்பது போன்ற கதைகளும், இதாலிய கவிஞனை டான்டேயின் “திருவருள் நாடகமும்” பெருங் கனவுகள்.

இக்கனவுகள் பெரிதாயினுஞ் சிறிதாயினுங் கவிஞனுக்குத் தோன்ற, அவனைச் சுற்றியுள்ள உலகில் நடக்குஞ் சம்பவ மெதுவாயினும் போதுமானது. மேல் வானத்திலே, உதிரவெள்ளம் பெருக்கிப் பகற்பொழுது மாய்வதோ, அன்றி, சாலை யருகிலே காற்றினால் வீழ்ந்துலர்ந்துள்ள சிறு மலரோ, தேயங்க ளொன்றோடொன்று பொருத மக்கள் வெள்ளம் வற்றச்செய் தழிவதோ, அன்றி, களிமண் பொம்மை யுடைந்து விட்டதே யென்று கவலை கொண்டழுங் குழந்தையின் குரலோ, வாழ்வின் பொருள் முழுதுந் தெறித்து உலகங் கலக்கும் பேரமளியோ, அன்றி, கோயிலுள்ளே யெழும் மணியோசையோ, எதுவாயினுங் கவிஞனுணர்வினுள் வாழ்ந்தால், மனிதவாழ்வு நலம்பெற உதவுங் கனவாகவே வெளிவரும்.

மழைக்காலம், கிறிஸ்து பிறந்த நாள் கழிந்து ஐந்து தினங்களே யாகியுள்ளன; ஆனால் “மனிதருள்ளே அமைதியும், அன்பும்” என்ற தத்துவத்தை அவருபதேசித்துப் பன்னூறு வருடங்களாகிவிட்டன. எனினும், அன்பையும், அமைதியையும் மனித சமூகமடையவில்லை யென்பது தெளிவு பழைய வருடங்கழிகிறது. இரவிலே, நடுயாமத்தில், கோயில் மணிக ளொலிக்கின்றன. மழையிருளிலும், பனிமூட்டத்திலும், மாரிக் குளிரிலும், புதுவருடம் பிறக்கிறது. பழையவருடங் கழிவதையும், புதியது வருவதையும், மனித சமூகம் படும்பாட்டையும், ஆங்கிலக் கவி யொருவன் நினைக்கின்றான்; மனிதனடைய வேண்டிய ஆன்ம நிறைவைப்பற்றிக் கனவு காண்கிறான், கோயில் மணிகளினொலி அவனது சிந்தனையூடே கலந்துகொள்கிறது.

ஒலிமின் ! மணிகாள், ஒலிமின் !
மழையும், முகிலும், பனிமூட் டொளியும்
ஒழிந்திட வானில், ஒலிமின்.
கலங்கி மூதாண்டு கழிகிரு ளிரவில் ;
கலங்கவிர் ஒலிமின், ஒலிமின் !

பழையன கழியவும் புதியன புகவும்
சூழ்பனி யூடே யொலிமின் !
மெலிந்ததா லாண்டு மேவின ஞயினென் ?
ஒலிமின், சயியா தொலிமின் !

பொய்யெலா மறவும், மெய்யுயிர் பெறவும்
ஐயமி லாமலே யிசைமின்.
திசையெலாம் நார்க்குச் சீர்பொங் கியதென
இசைமின், மணிகாள், இசைமின்,

இனியிங் குலகிலே காண்கிலோ மவர்க்கு,
மனமழி துயாற ஒலிமின் !
இலருள ரிவர்தம் பூச லொழிந்தது,
இசைமின் ! இன்னிசை யிசைமின் !•

வாழும் வகைகள் நலம்பெற் றுயர்ந்து
வரித்தன சீலமென் றசைமின்,
இனியநல் லொழுக்கமும் புனிதமா நீதியும்
ஈந்தன அவையென் றசைமின்.

வீட்டுச் செருக்குயர் சாதிச் செருக்கும்
வன்மமுந் தூறும் மாய்ந்தன.
வாய்மையும், நேர்மையும், மக்களின் நலமும்
வளர்பெற இன்னிசை யொலிமின்.

அழுநோய்ப் பேய்கள் அழிந்தன ; ஒடுக்குறு
பைம்பொன் ஞசை ஒய்ந்தது.
பண்டைநாட் போரெலா மயரவே சாந்தப்
பல்லாண் டோங்குமென் றொலிமின்.

A. ஸ்ரீநிவாஸராகவன்.

சூர்ப்பநகை.

(791-ம் பக்கத் தொடர்ச்சி)

இராமபாணத்தால் மாய்ந்த கரனைச் சென்று கண்டு “அலங்கல் வேற்கை யரக்கரை யாசறக் குலங்கள் வேரறுப்பான் குறித்தவ”ளாகிய சூர்ப்பநகை தன் வயிற்றிலறைந்து கொண்டு, அவனை யெடுத்துத் தழுவிக் குருதிப் புனலிற் புரண்டு - 'கொடியளாகிய யான் என் மனத்தாசையால் மூக்குமுதலியன குறையப் பெற்றதோடமையாது உங்களிடமும் வந்து கூறி உங்கள் நெடுநாள் வாழ்வையு முடித்தேன்' என்று புலம்பிய பிறகு, இவ்விவரம் இராவணனிடங் கூறக் காற்றிலும் கடிய வேகத்தோடு தன் செந்தலைமேற் கையை வைத்து இடிமுழக்கம்போ லாற்றி யுகாந்த காலக் கடல்போல் கோபித்தார்த்துப் பல வரசர்களும் நெருங்குகின்ற இலங்கையின் வடக்கு வாயிலில் வந்தாள்.

மிக்க கீர்த்தியுடைய இராவணன் தங்கை இவ்வாறு வருவதைத் தொன்னக ரரக்கிய ரனைவருங் கண்டு 'மூன்றுலக முடைய இராவணன் தங்கை மூக்கு முதலியனவின்றி அலங்கோலமாய்த் தனித்து வருதலைத் தரியாமல் தத்தம் வயிற்றி லடித்துக்கொண் டேங்கி யழுதனர். பலர், உடையும் கூந்தலும் சோரப்பெற்று அயர்ந்தனர். கைலைமலையெடுத்த புயபலமுடைய இராவணனார் தங்கையின் நிலைமையை இதுவோவென் றெண்ணித் தளர்ந்து மார்பிலடித்துக்கொண்டு அவளெதிர் வந்து விழுந்தனர் பலர். அரக்கர் திடீரென வெழுந்து செயலற்று இடிபோலார்த்துக் கைபுடைத்துக் கண் நெருப்பெழ விழித்தனர்.

“இந்திரன் மேலதோ; உலக மீன்றபே
ரந்தணன் மேலதோ; ஆழி யானதோ;
சந்திரன் மௌலிபால் தங்குமே கொலோ;
அந்தர மென்றுநின் றழல்கின்றார் சிலர்.”

சிலர் 'யாவர் பகையுடையவர்; மூவுலகுமடங்கிய இவ்வண்டத்தோர் இச்செயல் செய்யத் துணியார்; ஆதலால் இவ்வண்டத்திற் கப்பாலுள்ள அண்டத்தார் செய்ததேயாகு'மென்றார். இவள் இராவணனார் தங்கையெனச்சொல்லக் கேட்டவுடன் அனைவரும் 'அன்னையே' யென்று வணங்குவதைத் தவிர இச்செய்கை செய்யவேண்டுமென்று ஒருவராவது மனதில் நினைப்பாரா? ஆதலால் இவள் தன்னைத்தானே இக்காரியஞ் செய்துகொண்டு வந்திருக்கவேண்டு மென்றனர் சிலர். சிலர், 'இந்திரன் ஏவல் பூண்டான்; அரியும் அரனும் இராவணனாற்றலுக்குத் தோற்றோடி முறையே கடலிலும் கைலையிலுஞ் சென்றொளித்தனர்', ஆதலா லவர்கள் செய்திருக்கமாட்டார்கள்; ஒருவேளை இவள் ஒழுக்கங்கடந்து நடந்திருத்தல் கூடும், அதனால் துணைக்குச் சென்ற கரன் இவளை யழகுகேடியாகச் செய்திருப்பானோ? என்று ஐயுற்றார். மற்றுஞ்சிலர், மூவுலகையும் ஒருங்கே முடிக்கவெண்ணியவர்களே இக்காரியஞ் செய்திருக்கவேண்டு மென்றனர். இக்காரியஞ் செய்ததால் திட்டமாக இனியொரு கற்பமுண்டாகு மாதலால் காட்டிலுள்ள முனிவர்களின் கோபத்தின் முடிவாகு மென்றனர் சிலர். இலங்கைமாநகாரக்கியர் தம்வளைக்கைகளை நெரித்துக்கொண்டு நிலைகுலைந்து மனமொரு வழிகிடக்கச் செய்கை யொருவழிச் செல்ல ஒருவர் முன் னொருவர் ஓடினர். வீரக் காதலருடன் ஊடலாற் சிவந்த அரக்கியர் கண்கள் அலங்கோலச் சூர்ப்பநகையைக் கண்டதும் முன்னினும் மிகுதி சிவக்கப்பெற்று அவள் தாளில் வந்து விழுந்து தழுவிக் கொண்டனர். களிப்புடன் கமுகமரத்திற் கட்டிய ஊசலாடு மகளிர் தெருவில்வந்து பொருமி விம்மியழுதனர். தங்கையின் நிலைமையைக் கண்ட நம்மரசன் எத்தன்மையனுவ னென்றனர் பலர். பல மாதர்கள் மார்பிலடித்துக் கொண்டு சூர்ப்பநகையின் முன்வந்து விழுந்தனர். அனைவரும் 'இலங்கையிலிருக்கும் விலங்குகள்கூட இத்துன்பமெய்தப்பெறாவாயிருக்க, இச்சூர்ப்பநகை யடைந்ததால் இன்பங்கள் நம்மைவிட் டகன்றனவோ' வென்று மனம்

வருந்திக் கண்ணீர் நிலந்தொரிய நின்றனர். இன்னலென்பதே யறியாத இலங்கைமா நகரமாக்களாகிய ஆண்பெண்பாலா ரனைவரும் இராவண னறியுமுன்னமே பெருந் துன்பக் கடலில் மூழ்கினர்.

இவ்விவரங்களைவைத் தாராய்ந்தால் சூர்ப்பநகை இராவணன் கேட்டிற்கு உற்பாதமென இலங்கைக்கு வந்தவளாகும். கம்பநாடரும் தாடகை தலையற்று வீழ்தலைக் குறிக்கும்போது "முடியுடை யரக்கர்க் கந்நாள் முந்தியுற் பாதமாகப் படியிடையற்று வீழ்ந்த வெற்றியம் பதாகை யொத்தாள்" என்றுகூறி, அதைப் பலவிடங்களிலும் நினைவுபடுத்திச் சூர்ப்பநகை மூக்கரிபட்ட விடத்தில் "அத்தோற்றம் இராவணன் தலையையறுக்க நாட்செய்த தொத்ததோர் தன்மை" என்று குறிப்பிட்டு, இவ்விடத்தில் விளங்கக் கூறுகின்றார்.

பளிக்கு மாளிகைத் தலந்தொறு மிடந்தொறும் பசுந்
துளிக்குங் கற்பகத் தண்ணறுஞ் சோலைகடோறும் [தேன்
அளிக்குந் தேறலுண் டாடுநர் பாடுந ராகிக்
களிக்கின்றாலாற் கவல்கின்ற வொருவரைக் காணேன்"

என்று அநுமன் வாக்கில்வைத்துப் பின்கூறும் கம்பர் சூர்ப்பநகை வரும்போது கண்ட அந்நகரத்தார் சீர்கேட்டைச் சொல்லுங்கால்,

"முழவினில், வீணையில், முரளி, யாழினில்,
தழுவிய குழலினில், சங்கில், தாரையில்,
எழுகுர லின்றியே என்று மில்லதோர்
அழகுரல் பிறந்தது, அவ்விலங்கைக் கன்றரோ."

என்று கூறுகின்றார். சூர்ப்பநகை வருவதற்குமுன் இன்பத்தைத் தவிரத் துன்பமென்பதே யறியாத அந்நகரத்தார் அவளைக் கண்டதும் என்றுமிலாத் துன்பமடைந்தனர்; என்றுமுள்ள களிப்புக் கூச்சலின்றி அழுகைக்குரல் அன்று இலங்கையிலுண்டாயது என்று கூறியிருக்கின்றனர். "அன்னமூந் துயர்க்கட லடிவைத்தானரோ" என்று சீதாப்பிராட்டியாருக்குக் கூறியபடி இலங்கைமா நகரத்தாரும் இன்றுதான் துயர் கண்டனர்; இராவணன் காணப் போகின்றான் என்பதைக் குறிப்பாலறிவித்தனர் கம்பர். விரிக்கிற் பெருகும். இஃதறியும் பொருட்டே அவ்வூருற்ற துயர மீண்டு தொகுத்தெழுதப்பட்டது.

கண்டா ரனைவரும் மேல்வருவதை யெண்ணிப் பயந்து ஓட வழிதேடும்படி வந்து வெகு சிறப்பாகக் கொலு வீற்றிருக்கும் தன் தமையனான இராவணனுடைய காலில் விழுந்து புரண்டாள். விழுந்து புரளும் தன் தங்கையைக் கண்டு தீராக் கதங்கொண்டான் இராவணன்; கண்டாரனைவரும் நடுங்கினர். பிறகு அவன் இன்ன சமாசாரமென்று முன் வரலாறொன்று மறியாது, சூர்ப்பநகையை நோக்கி;

"மடித்தபில வாய்கடொறும் வந்துபுகை முந்த;
துடித்ததொடர் மீசைகள் சுறுக்கொள வுயிர்ப்ப;
கடித்தகதிர் வாளெயிறு மின்கஞல; மேகத்
திடித்தவுரு மொத்துமி, "யாவர் செயல்" என்றான்.

இதைக் கேட்ட சூர்ப்பநகை "'பூமி காப்பவரும், மன்மதனை யொப்பவரும், ஒப்பா ரற்றவருமான மனிதர் வானா லளிந்தனர்' என்று பதிலுரைத்தாள். இவ்வடாச்செயல் செய்தவர் மனிதரெனக் கேட்டதும் வெடிபடச் சிரித்துக் கண்களில் நெருப்புப் பொறிபறக்கச் சூர்ப்பநகையை நோக்கி 'அற்பவலிமைத் தொழிலுடையவர் சொன்ன வார்த்தை யொன்றுதானா? பொய் சொல்லாதே! பயந் தவிர்த்து நடந்தவைகளைச் சொல்லெனச் சூர்ப்பநகையுஞ் சொல்லத் தொடங்கினள். சூர்ப்பநகை சொல்வதாக ஆறு செய்யுட்களால் கம்பர் கூறுகின்றார். அதன் சுருக்கம் வருமாறு.

"மன்மதனுக் கொப்பானவர்; தம் தோள் வலியால் மேருமலையின் வலிமை யழிப்பார்கள்; இப்பொழுததனைச் சொல்வதாற் பயனென்னை; இமைப்பொழுதில் இங்குள்ளார் வலிமை முழுவதையு மழிக்க வல்லவர்; முனித் தலைவர்களிடம் வணக்கமுடையார்; சந்திரனை யொத்த முகத்தார்; தாமரை மலரைப் போலு கண்ணும் கைகளு முடையவர்; தவத்தொழிலைத் தலைமேற் கொண்டவர்; தமக்கு ஒப்பாரு மிக்காரு மில்லாதவர்; மரவுரி யுடுத்து வீரக் கழலணிந்து பூணூல் தரித்தவர்; விண்மறை நன்கு கற்றவர்; எப்பொழுதும் வேதம் ஓதிக் கொண்டிருக்கின்றனர்; உண்மையைக் கைக்கொண்டவர்; உன்னை ஓர் துகளளவுகூட மதித்தெண்ணுதவராதலால் உன்னுல் துன்பமடையத் தக்கவரில்லை; சொற்களைப் போல முடிவடையாத அம்புப் புட்டில்களைச் சுமக்கின்றனர்; முன்னுள் வேதியர் வேண்டுகோளால் உங்கள் குலத்தை முதலோடு முடிப்போமென்று சபதஞ் செய்திருக்கின்றார்கள்.

" மாருளரே யிருவர் ஒருலகின் வாழ்வார்
வீருளரே யவரின் வில்லதனின் வல்லார்
ஆரொருவ ரன்னவரை யொப்பவர் களையா
ஓரொருவரே யிறைவர் மூவரையு மொப்பார்"

இவ்விருவரும் தயரதன் மக்களாவர்; பழிப்பில்லாதவர்; அத்தயரதன் சொற்படி காட்டில் வாழ்கின்றார்கள். அவ்விருவரும் முறையே 'இராமன், இலக்குமணன் என்று கூறப்படுவார்கள் என்று கூறி முடித்தாள்.

மருந்தனைய தங்கை மனிதரால் மூக்கு முதலியன அரியப்பெற்று அழகிழந்தாளென்று கேட்டதும் இராவணன் வெட்கத்தால் தேய்ந்து, தன்னையே வெறுத்துக்கொண்டு பிறகொருவாறு தேறி எரியெழ விழித்துச் சூர்ப்பநகையை நோக்கி "அத் துணையில்லா மானிட ரிருவரையும் கரன் முதலிய அரக்கர் வாளால் வெட்டிக் கொன்றுவிட வில்லையா" வென்றான். கேட்டதும் சூர்ப்பநகை வயிற்றி லடித்துக்கொண்டு கீழேவிழுந்து தலைமேற் கைவைத்தழுது 'ஐய' யான் இவ்விவரம் கரதூடணுதியரிடஞ் சென்று சொல்லுவதற்குமுன் அவர்கள் தம் சேனையோடு வந்து ஆர்த்துப் போர் செய்தனர். அவர்களெல்லோரும் கமலக் கண்ணனான இராமனென்பவனது ஒரு வில்லால் மூன்று நாழிகையில் இறந்தனர்' என்றனள்.

கரதூடணுதியரும் சுற்றத்தோடு ஒரு மனிதன் செய்த போரில் இறந்தன ரென்று கேள்விப்பட்டவுடன் அவனது கண்களிலிருந்து நீரும் நெருப்பும் உண்டாக, சூர்ப்பநகையிடம் "உன்னை யவர்களிவ்வாறு செய்ய நீ அவர்களுக்குச் செய்த தீங்கென்ன" வென்றான். அதற்கவள் "ஒருவராலும் சித்திரத்திலு மெழுதொணுத உருவுடைய இராமனோடு வந்தவளும், தாமரையிலிருந்து வந்த திருப்போல்பவளும், மின்னலிடம் இடையும், வேயிடைத் தோளும், பொன்னிடம் மேனியுங் கொண்டவள் பொருட்டே" யென்று புகன்றனள்.

கேட்ட இராவணன் அங்ஙனமொத்த பெண்மணி யாரென்று சூர்ப்பநகையைக் கேட்டான். அதற்கவள் "ஐய! அவள் பெயர் சீதை; அவளுடைய பாதங்களைத் தொடுவதற்குப் பூமி பாக்கியம் படைத்ததாயின் அவளுடைய மற்றைய அங்கங்களின் அமைப்பழகை நீயே நினைத்துத் தேர்ந்து கொள்வாய்; அவளது வடிவ மெல்லாங் கூறுவது அறிவின்மை யாயினும் சிறிது கூறுகின்றேன்.

"வண்டிசையும் தேனும் தேவாமிருதமும் போன்ற இனிய சொல்லுடையாள்; மலர் களணிந்த நீண்ட அவள் கூந்தல் மேகத்தை யொத்திருக்கும்; தேவர்களை விட அழகுடையாள்; திருமகளும் அவளுக்கு அடிமைக்காரியாகுந் தரமுடையளல்லள்; பஞ்சுபோன்ற அவளது மெல்லிய திருவடிகளில் பவளத்துண்டுகள் போன்ற விரல்களுடையவள். அவளது கண்கள் தாமரை மலர் போன்றனவாயினுங் கடலைவிடப் பெரியனவும் வாளையும்வேலையும் வென்றிகொண்டு மிருந்தன.

மன்மதன் இவ் வாசம்நாறுங் கூந்தலாளைக் கண்டு வலிய வழியாற் பேசுவதற்கியலாது ஆசையால் தன்னுருவம் தேய்ந்தொழியப் பெற்றனேயன்றிச் சிவபிரானது நெற்றிக் கண்ணினுலழிந்தா னென்பது பொய்யேயாகும். தேவலோகததிலும் நாகருலகிலும் இப்பூமியிலும் மற்றெவ்வுலகத்திலும் அவ்வெழுதரு மேனியாளைப் போல்பவர் இல்லை.

அன்னவளது தோளைப் புகழட்டுமா? அவள் முகத்திலுலவும் வாள்போன்ற கண்ணைப் புகழட்டுமா? வல்லொத்த தனத்தைப் புகழட்டுமா? புகழ்ந்து பேசுவதற்கு மீளவுந் திகைத்தலைத் தவிர வேறில்லை; நாளைத்தினமே சென்று காண்; புருவம் வில்லை யொக்குமென்று கூறினுலும், வேலை நிகர்க்கும் கண்ணென்று சொன்னுலும், பல்லைப்போலும் முத்தென்று பகர்ந்தாலும், நற்பவழத்தை இதழென்று சொன்னுலும் சொன்மாத்திரத்திற் பொருந்துமேயன்றி உணர்ந்து பார்க்கின்றபொருள் பொருந்தமாட்டாது. அவ்வா றெக்குமென்றால் நெல்லுக்குப் புல் ஒப்பாகுமென்று கூறலாகும்.

இந்திரன் சசியைப் பெற்றான்;
இருமூன்று வதனத் தோன்றன்
தந்தையு முமையைப் பெற்றான்;
தாமரைச் செங்க ணுனும்
செந்திரு மகளைப் பெற்றான்;
சீதையைப் பெற்றாய் நீயும்;
அந்தரம் பாரக்கில் நன்மை
அவர்க்கில்லை யுனக்கே யையா!

பாகத்தி லொருவன் வைத்தான்;
பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தி லொருவன் வைத்தான்;
அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தின் மின்னை முன்னே
வென்றநுண் ணிடையை நீயும்
மாகத்தோள் வீர பெற்றால்
எங்ஙனம் வைத்து வாழ்தி.

பிள்ளைபோற் பேச்சி னுளைப்
பெற்றபின் பிழைக்க லாற்றாய்
கொள்ளைபோ கின்ற செல்வம்
அவளுக்கே கொடுத்தி யையா
வள்ளலே யுனக்கு நல்லேன்
மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளைபோன் மொழியார்க் கெல்லாம்
கேடுசூழ் கின்றே னன்றே.

R. முத்தையர்.

வானசாஸ்திரம்.

(855-வது பக்கத் தொடர்ச்சி)

யூரானஸ், நெப்டியூன்.

இவ்விரண்டு கிரகங்களும் தூரதிருஷ்டியின் மூலமாக நம்முடைய அறிவுக்கு எட்டிய கிரகங்கள். நெப்டியூன் 1846-ம் ஆண்டு முதல்முதலாக கால் (Galle) என்னும் வானசாஸ்திரியால் காணப்பட்டது. இதற்கு அறுபத்தாறு வருஷத்துக்குமுன், அதாவது 1751-ம் ஆண்டு ஹைறெஷல் என்னும் வானசாஸ்திரி யூரானஸ் என்னும் கிரகத்தைக் கண்டு பிடித்தார். ஆகவே நூற்றைம்பது வருஷங்களுக்குமுன் இந்த இரண்டு கிரகங்கள் இருப்பது ஒருவரும் அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. இவைகள் வெறுங் கண்ணுக்குத் தோற்றுவதில்லை. அது மாத்திரமன்று இவைகள் இரண்டும் சூரியனிலிருந்து வெகு தூரத்திலிருப்பதனுல் இவைகளின் தன்மையைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளக் கூடியவை மிகச் சில. யூரானஸ் சூரியனிலிருந்து 1781,900,000 மைலுக் கப்பாலும், நெப்டியூன் 2791,600,000 மைலுக் கப்பாலுமிருந்து முறையே, 84 வருஷம் 7 நாளிலும், 164 வருஷம் 284 நாளிலும், சூரியனைச் சுற்றிவருகின்றன. இவைகளின் சுற்றளவு முறையே, 34,9000 மைலும், 32900 மைலு மென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவைகளிரண்டும் எவ்விதமான நிலையில் இருக்கின்றன வென்பதைப் பற்றி ஒன்றும் உறுதியாய்ச் சொல்ல முடியாது. இவைகள் ஆவிமயமாய் இருக்கக்கூடும் என்பது வானசாஸ்திரிகளின் அபிப்பிராயம். யூரானஸ் பத்து அல்லது பன்னிரண்டு மணி நேரத்தில் சுழல்கின்றது என்று எண்ணுகிறார்கள். நெப்டியூனுடைய சுழற்சியைப்பற்றி ஒன்றும் தெரியாது. யூரானஸுக்கு நாலு சந்திரர்களும் நெப்டியூனுக்கு ஒரு சந்திரனும் உண்டு என்று சொல்லுகிறார்கள். சூரியனிலிருந்து இவைகளுக்கு எட்டும் ஒளி மிகச் சொற்பம். நெப்டியூனில் இருந்துபார்த்தால் சூரியன் சுக்கிரனைப் போலத் தோன்றும் என்று சொல்லுகிறார்கள். ஆனுல் நமக்குச் சந்திரனில் இருந்து வரும் ஒளியைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு அதிகமான ஒளி நெப்டியூனுக்கு எட்டுகிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

தூமகேதுக்கள்.

இதுவரையும் சூரியக் கிரகக் கூட்டத்தில் கிரகங்கள் உபக்கிரகங்கள் அஸ்தரஉடுக்கள் ஆகிய இவைகளைப் பற்றிச் சொல்லிவந்தோம். இவைகளைத் தவிர சூரியனோடு சம்பந்தப்பட்ட தூமகேதுக்கள் எரிநக்ஷத்திரங்கள் ஆகிய இவைகளைப் பற்றி விசாரிப்போம்.

சூரியன் கிரகங்கள் உபக்கிரகங்கள் அஸ்தரஉடுக்கள் ஆகிய இவைகள் எல்லாம் சடவஸ்துக்கள். இவைகள் சூரியனைச் சுற்றிவரும் பாதைகள் ஒன்றுக்குள் ஒன்று வரிசைக் கிரமமாய் இருக்கின்றன. இவைகளின் பாதைகளும் ஏறக்குறைய வட்டவடிவமானவை. மேலும் கிரகங்கள் ஒன்றாவது நமது பார்வைக்கு எட்டாத தூரத்துக் கப்பால் போவதில்லை. தூமகேதுக்கள் இவ்விதமில்லாமல் எல்லாவகையிலும் வேறுபடுகின்றன. முதலாவதாய் அவைகளுக்கு நிலையான உருவமில்லை அவைகள் சடப்பொருள்கள்தான் என்று சொல்வது முடியாது. அவைகளின் அமைப்பு மிகவும் நுண்ணியதா யிருப்பதால் அவைகள் நக்ஷத்திரங்களுக்கு முன்னுகச் செல்லுகின்ற காலங்களில் அந்நக்ஷத்திரங்களின் ஒளி சற்றும் மழுங்குவதில்லை. இவைகளின் பாதைகள் மிகநீண்ட வலயங்கள்.

அதாவது இவைகள் சூரியனைச் சுற்றி வருகையில் சூரியனுக்கு மிக்க சமீபத்தில் வந்து சூரியனிலிருந்து செல்லுகையில் கிரகங்கள் சுற்றிவரும் எல்லைக் கப்பாலும் வெகு தூரம் செல்கின்றன. இவ்விதம் இவைகள் செல்லும் பாதையின் அளவைக் கணக்கிட முடியாது.

தூமகேதுக்கள் உருவத்தில், வட்டமான ஒரு பாகமும், அதிலிருந்து அனேகலக்ஷமைல் நீளமுள்ள நீண்டபாகமு முள்ளனவாய்த் தோன்றுகின்றன. முந்திய பாகத்திற்குத் தலை என்றும், பிந்திய பாகத்திற்கு வால் என்றும் பெயரிட்டிருக்கிறார்கள். தலையிலே நடுவில் சற்று அடர்த்தியான பாகம் ஒன்று இருக்கிறது. தலை சில தூமகேதுக்களில் மிகச் சிறியதாயும் சிலவற்றில் சில சமயங்களில் சந்திரனளவு பெரியதாயு மிருக்கின்றது. சில சமயங்களில் வால்பாகம் இல்லாமலே சில தோற்றுகின்றன.

தூமகேதுக்கள் ஆகாயவெளியில் கண்ணுக் கெட்டாத தூரத்திலிருந்து சூரியனை மிக வேகத்துடன் அணுகி மறுபடியும் அந்தர வெளியில் அதிவேகமாயச் சென்று மறைந்து போகின்றன. இவைகள் சூரியனுக்குச் சமீபத்தில் வருகையில் அவைகளின் தலை சிறுத்து வால் நீண்டு வளருகின்றது. மறுபடியும் அவை சூரியனைவிட்டு விலகிச் செல்கையில் வால் குறுகிப்போய் தலை வளர்ந்து செல்கின்றன. நமது பார்வைக்கப்பால் சென்றபின் இவைகளில் வேறு என்ன மாற்றங்கள் சம்பவிக்கின்றன என்பதைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது.

தூமகேதுக்களின் சுற்றோட்ட பாதைகள் மிக நீண்ட வலயங்கள் என்று சொன்னோம். சில தூமகேதுக்களின் பாதைகளின் வளைவை அளந்து கணக்கிட்டதில் அவைகள் நெப்டியூனுக்கப்பால்,இதற்கும் சூரியனுக்கு மிடையிலுள்ள தூரத்தைப்போல ஆறு மடங்கு தூரத்துக்கப்பால் செல்கின்றன வென்று தெரிகிறது. இவ்விதம் இவைகள் கணக்கிறந்த தூரத்துக்கப்பால் போய் வருவதால் இவைகள் சூரிய கிரகக் கூட்டத்துக்குச் சேர்ந்தவைகள்தானோவென்ற சந்தேகம் இருந்தது. ஆனால் இப்போது இவைகள் சூரியனுடைய ஆட்சிக்குக் கீழ்பட்டவைகள்தாம்என்பது வானசாஸ்திரிகளின் துணிபு ஆனால் இவைகள் ஒரு முறை சூரியனைச் சுற்றி வந்தால் மறுபடியும் அவ்விதம் சுற்றி வருமோ அல்லது அந்தர வெளியில் சுற்றி அலைந்து கொண்டிருக்குமோ வென்பதை முடிவாய்ச் சொல்ல முடியாது சில காலச்சக்கரத்தில் குறித்த காலங்களில் சூரியனை முறையே சுற்றி வருகின்றன. இவைகளைப் பற்றிப் பின்னால் சொல்லுவோம்.

தூமகேதுக்கள் மிகவும் லேசாயும் பாரம் இல்லாத மிகவும் நுண்மையா யிருப்பதனால் இவைகள் மற்ற வஸ்துக்களைத் தங்களிடம் ஆகருஷிக்கிற சக்தியற்றவை. ஆனால் இவைகளை மற்ற அண்டங்கள் அவைகளுடைய ஆகருஷண சக்தியால் நிலைமாறச் செய்கின்றன அதுமாத்திரமின்றி, தம்மையே இவைகள் சுற்றிவரத் தக்கதாகக் கவர்ந்து கொள்கின்றன. மேலும் தூமகேதுக்கள் சூரியனைச் சுற்றிவருகையில் ஒரே திசையாய்ச் சுற்றுவதுமில்லை. ஒரே மட்டத்திலும் இருப்பனவல்ல பல திசைகளிலிருந்து வருகின்றன. வேறுபட்ட நிலைமட்டம் உடையவைகளாயு மிருக்கின்றன.

தூமகேதுக்களை இரு வகுப்பாகப் பிரித்திருக்கிறார்கள். முதல் வகுப்பில் சேர்ந்தவைகள் ஒரே பாதையில் ஒன்றின்பின் மற்றொன்றாக அனேக தூமகேதுக்கள்சூரியனைச் சுற்றுவன. இந்த வகுப்பைச் சேர்ந்தவைகள் ஏறக்குறைய ஒரே தன்மையுள்ளவைகளா யிருக்கின்றன.

இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவைகள் அந்தர வெளியில் அலைந்து திரிந்தவை சில கிரகங்களின் ஆகருஷ்ணசக்தியால்கவரப்பட்டுச் சூரியனைச் சுற்றிவருவன. இவைகள் எந்தக் கிரகத்தால் கவரப்பட்டனவோ அந்தக் கிரகம் சுற்றும் முகமாய் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவ்விதமாய் வியாழனைச் சேர்ந்து முப்பது தூமகேதுக்களும்,சனிக்கு இரண்டும்,யூரானஸுக்குமூன்றும்,நெப்டியூனுக்கு ஆறும், இருக்கின்றன வென்று சொல்லுகிறார்கள். சில, நெப்டியூனுக் கப்பாலுள்ள ஏதோ அண்டத்தின் சக்திக்குள் அடங்கியவைபோலத் தெரிகின்றன. இதிலிருந்து நெப்டியூனுக் கப்பாலும் கிரகங்கள் இருக்கக் கூடுமோவென்ற சந்தேகமும் உண்டு.

புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகிய கிரகங்களுடைய சக்திக்குள் அடங்கிய தூமகேதுக்கள் ஒன்றும் இல்லை. இதற்குக் காரணம் இக்கிரகங்களுக்குச் சமீபத்தில் சூரியனுடைய சக்தி இந்தக் கிரகங்களின் சக்தியைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு அதிகமா யிருத்தலால் இவைகள் இக்கிரகங்களின் சக்திக்குள் அடங்குவதில்லை. இவ்விதம் சூரியனுடைய சக்திக்குள் அகப்பட்ட தூமகேதுக்கள் எக்காலத்திலும் சூரியனைச் சுற்றிவருகின்றன வென்று சொல்வதற்கில்லை இவைகளிற் சில வேறு சக்திகளால் கவரப் ட்டு மறுபடியும் அந்தர வெளியில் மறைந்து போவதுமுண்டு.

இவ்விடம் சில பிரதானமான தூமகேதுக்களைப்பற்றி எடுத்துச் சொல்லுவோம்.

1680-ம் ஆண்டுதோற்றிய தூமகேது நியூட்டனால் சோதிக்கப்பட்டு அவரால் அதன் சுற்றுப்பாதையையும் அது சூரியனைச் சுற்றிவரும் காலமும் கணிக்கப்பட்டது. இது ஒரு முறை சூரியனைச் சுற்றிவர 600 வருஷ காலம் செல்கின்றது.

1682-ம் வருஷம் தோற்றிய தூமகேது ஹெயிலி என்பவரது பேரால் அழைக்கபடுகின்றது. இது சூரியனைச் சுற்றிவர எழுபத்தைந்து வருஷம் செல்கின்றது. இது திரும்டவும் 1759-ம் வருஷத்திலும், 1910-ம் வருஷத்திலும் தோன்றி ஹெயிலின் கணக்குச் சரியென்பதைத் தெரிவித்தது.

1811-ம்ஆண்டு ஒரு மிகப்பெரிய தூமகேது தோன்றி ஒன்றரை வருஷகாலம் வரையில் கண்ணுக்குத் தெரிந்திருந்தது. இதன் வாலின் நீளம் 10,00,00,000 மைல் என்றும்,தலை 1,27,000 மைல் குறுக்களவு உள்ளதென்றும் கணக்கிட்டிருக்கிறார்கள்

1858-ம் ஆண்டு தோன்றிய ஒரு தூமகேது மூன்று மாதம் வரையிலும் வெறுங்கண்ணுக்குத் தெரியத்தக்கதாய் இருந்தது இதன் வால் 5,40,00,000 மைல் நீளமுள்ளது. சூரியனைச் சுற்றிவர 2000 வருஷம்செல்லும். இது சூரியனிலிருந்து நெப்டியூன் இருக்கிற தூரத்துக்கு ஐந்து மடங்குக் கப்பால் செல்கின்றது.

1907-ம் வருஷம் ஒருதூமகேது தோன்றியது ஆனால் இது உதயகாலத்துக்குச் சற்று முன்னாக வானத்தில் தோன்றியதால் அனேகருக்குக் தெரியாமல் போய்விட்டது.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

8. வேள்விப் படலம்.

(876-ம் பக்கத் தொடர்ச்சி.)

அறமே நோக்கி யறத்தைச் செய்க.

திருக்குறளின் மெய்ப்பொருளில் தோய்ந்துள நம் கவிசக்கரவர்த்தியின் கற்பனையாகிய மாவலி, திருவள்ளுவ நாயனார் கோலிய வேலியுங் கடந்து வண்மையின் இலக்கணத்தை மேம்பட வகுத்தா னென்பதற்கு,

கட்டுரை யிற்றம கைத்துள போழ்தே
இட்டிசை கொண்டற னெய்த முயன்றோர்
உட்டெறு வெம்பகை யாவது லோபம்
விட்டிட லென்று விலக்கினர் தாமே.

[தங்களுடைய செல்வம் இருக்கின்ற பொழுதே அதனைக் கொடுத்துப் புகழைப்பெற்று அறவாழ்க்கையை அடைய முயன்றவர்களை உள்ளிருந்து சிதைக்கின்ற கொடிய பகையாவது உலோபம். ஆதலால் ஆன்றோர் அதனை விட்டுவிடுங்கள் என்று தம் பொருளுரைகளால் விலக்கியுள்ளார்.]

என்னுமிப் பாசுரமும் ஆதாரமாயிருக்கின்றது. "இட்டிசை கொண்டு" என்னுஞ் சொற்கள் 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற குறளினின்று பெயர்ந்து வந்தன. ஆயினும் புகழொன்றையே உயிரிற்கு ஊதியமெனக்கொண்டு அப்புகழிற்கு ஈதலைக் கருவியாக்கி முடிகின்றது அத்திருக்குறள். மாவலியோ இசையை, எய்தவேண்டிய இலாபமாக மதியாமல் அறத்தினை ஆற்றலாவதே முயற்சியின் முடிவென இயம்புவா னாகின்றனன். ஈவதும், அதனைத் தொடர்ந்து தானே வருகின்ற புகழும், அறநெறிப் படர்வோர் இடையுறு கருமமும் செய்தியும்ஆகும். இட்டு அதனால் வரும் இசையைக் கொள்வதாகிய அறத்தை எய்த முயலும் முயற்சியே இவன் கருத்தின்படி மாநுடப் பிறவியின் முடிவான நோக்க மாகின்றது. "ஈதல் இசைபட வாழ்தல்" என்றதோடு ஊதியத்தைத் திருவள்ளுவர் அக்குறளில் நிறுத்திக் கொண்டாரேனும், உற்று நோக்குங்கால் புகழைப் புகழிற்காகவே நாடவேண்டுமென்பது அவர் கருத்தும் அன்றெனப் புலப்படும். இக்குறளைத் தன்னுள் கொண்டுள "புகழ்" என்னும் அதிகாரம், அறத்துப் பாலில் இல்லறவியல் ஈற்றதிகாரமாக வைக்கப் பெற்றிருக்கின்றது. இதற்குப் பரிமேலழகர், "இல்வாழ்க்கை முதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின் அதன்பின் வைக்கப்பட்டது"என்று தோற்றுவாய் கூறுவார். ஆயினும்,அவ்வவ்வதிகாரங்களில் கூறியாங்கு விலக்குவன விலக்கிக்கொள்வனகொண்டு இல்லறம் நடத்துவதெல்லாம் இப்புகழெனும் இலாபத்தைப் பெறுவதன் நிமித்தம் செய்தல்வேண்டும் என்னும் கருத்துத் திருவள்ளுவருக்கு இருந்ததாக ஐயமின்றி எண்ணவோ இடமில்லை. "புகழ்" என்னும் அதிகாரத்தை, 'மானம்', 'பெருமை' என்ற அதிகாரங்களோடு ஒழிபியலிற் சேர்க்காமல், இல்லறவியலின்கண் வைத்ததினாலேயே 'புகழ்' என்பதை அறத்தின் பயன் அல்லது ஊதியமெனப் பிரிக்காது அறத்தினுட் சேர்ப்பதே தகும். புகழைச்செய்வது இல்வாழ்வார்க்குரியவோர் அறம்: அவ்வளவே. இவ்வறத்தைச் செய்வது எவ்வாறெனில், முன்சென்ற அதிகாரங்தனிலடக்கிய விடயங்களுக்கு ஒக்க ஒழுகுதலேயாகும். அவ்வாறு ஒழுகுகின்றா னென்பதற்கு, எய்தும் புகழை அறிகுறியாகக் கொள்ளினும் கொள்க; அறநெறியின் நோக்கமும் ஊதியமும் புகழ் ஆவதென்பது அமையாது. இவ்வதிகாரத்தின் ஈற்றில் நிற்கின்ற, "வசையொழிய வாழ்வாரே வாழ்வார், இசையொழிய வாழ்வாரே வாழாதவர்" என்னும் செய்யுள் வள்ளுவரின் கருத்து இன்னதே என்பதைக் காட்டிக்கொடுக்கும்.இசையைப் பெருமையே வசையாகும் என்பதை 'வசையென்ப வையத்தார்க்கெல்லாம் இசையென்னும் எச்சம்பெறு அவிடின்" என்ற செய்யுளில் அவ்வதிகாரத்தினுள்ளேயே விளக்கினர். இனி, இக்கருத்துக்களை மனதிற்கொண்டு, "ஈதல் இசைபடவாழ்தல்" என்ற வாசகத்தை ஆராய்ந்தால், பரிமேலழகர் காட்டிய வண்ணம், ஈகைமாத்திரம் கூறப்பட்டிருந்தாலும், கூறியவவ்வீகை சிறப்புப் பற்றி இல்வாழ்வார்க் குரிய அறங்களை யெல்லாம் தன்னுள் அடக்கி நிற்கின்றதென்றும், அவ்வறங்களை ஆற்றுவோரை இசை வந்து படும் என்பதும் தெரிந்துகொள்வது அருமையன்று. ஆதலால், "அது வல்லது ஊதியம் இல்லை" என்று தொடர்கின்ற வாசகத்தில் 'ஊதியம்' என்னுஞ் சொல் வந்துளதேனும், வள்ளுவரின் உள்ளக் கிடக்கையை முற்றுமுணர்ந்து முழுவதாக நோக்குங்கால், அவர் "புகழ் என்னும் இலாபத்தைப் பெறும் பொருட்டு ஈகையாதி அறங்களை இல்வாழ்வானாகிய நீ செய்தல் வேண்டும்," என்று விதிக்க நினைத்திலரென்றும், மற்று "ஈகை முதலாய அறங்களை வழுவின்றி ஆற்றுவதே உனது நோக்கமாயிருக்கட்டும். அவ்வாறு ஆற்றுகின்றாய் என்பதற்கு உனது அகமேயன்றிப் புறச்சான்றாக வந்தெய்துவது புகழ். அப்புகழ்பட அறத்தினை நடத்துவதே நீ யெடுத்த பிறவிக் குரிய பயன் ஆகும்" என்று காட்டுவது மாத்திரமே அவர் கருத்தென்றும் இயம்பத் துணிந்தோம். இதன்முன் 'இல்வாழ்க்கை'யில், "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"என்று கூறியுள்ள குறளிற்குப் பரிமேலழகர் நிரனிறையாகப் பொருள்கொண்டு அன்புடைமையைப் பண்பாகவும், அறனுடைமையை அதன்பயனாகவுங் காட்டுவா ரெனினும், மணக்குடவர், "இல்வாழ்க்கையாகிய நிலைக்குக் குணமாவதும் பயனாவதும் அவ்விரண்டினையும் உடைமைதானே. பயன் வேறு வேண்டாம்" என்று அறத்தையே நோக்கி அறத்தைச் செய்வதல்லால் வாழ்க்கைப்பயன் வேறு இல்லை என்பதைத் தெளிவாக நாட்டினார். பின்னும், இம்மணக்குடவர், 'புகழ்' என்பதைப் பரிமேலழகரைப்போல் "இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயன்" என ஏற்காது, "புகழாவது புகழ்பட வாழ்தல்" என்று அறம் முயன்ற வாழ்க்கையின் இலக்கணமாகவே கொண்டுளார். இதற்கிணங்க "ஈதல் இசைபடவாழ்தல்........." என்னுமிக் குறள் மணக்குடவர் கருத்தின்படி "புகழ் உண்டாமாறு" கூறிற்றே யல்லாமல் "புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை" என்று கூறிற்றில்லை. 'அது அல்லது' என்பதற்குப் பரிமேலழகர்'புகழல்லாது' என்று பொருள் கொள்வார்; "கொடையானல்லது" என்று கொள்வார் மணக்குடவர்.

ஆதலின், பரிமேலழகர் உதவி கொண்டு ஆராயுங்கால் அறநெறி வழுவா வாழ்க்கையின் பயன் புகழ் என்பது

திருவள்ளுவரின் கருத்தென்று தோன்றுகின்றது. மரித் தொருகால், மணக்குடவர் துணைபற்றி நோக்குழி அவ் வாழ்க்கையின் அறிகுறியன்றிப் 'புகழ்' வேறென்றன்று. எது எவ்வாறாயினும் கம்பர்பிரானிடம் குறளினைக் கற்ற மாவலிவள்ளல் முயன்று எய்துதற் கொத்ததென நினைப்பது அறன். இசையைக் கொள்வதோடு முயற்சி முற்றுப் பெறுவதாக மதித்திலன்.

திருக்குறட்பாவினின்று இரண்டொரு சொற்களையே பெயர்த்து அமைத்துக்கொண்ட இச்செய்யுள் வள்ளுவர் எல்லையைக் கடக்க அமைந்ததோ, அதனுள் அடங் கியதோ என்ற சந்தேகத்திற்கு இடந்தராமாயினும், மாவலியின் வாக்காக வருகின்ற அடுத்த செய்யுள் ஐய மற வள்ளுவரின் அகன்றிருக்கின்றது. வண்மையின் உண்மையிலக்கணத்தை யெடுத் தோதிவந்த மாவலி, வழங்க நின்ற தன்னை விலக்கமுயன்ற தேசிகன்பால் கோபம் முதிரக் கடுஞ் சொற்களால் அவனை,

எடுத்தொரு வருக்கொருவ ரீவதனின் முன்னே
தடுப்பது நினக்கழகி தோதகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடு கின்றாய்

[ஏ, நடுவுநிலைத்தன்மை யற்ற வெள்ளியே, ஒருவர் எடுத்து ஒருவருக்குக் கொடுப்பதன்முன்னே தடுப்பது நினக்கு அழகாமோ. கொடுப்பதைக் கெடுக்கின்ற கொடி யவனே, இதனால் நீயும் உனது சுற்றத்தாரும் உடுப் பதற்கு உடையும், உண்பதற்கு உணவுமின்றித் தரித் திராகி விடுகின்றீர்கள்]

என்று இடித்துரைத்து முடித்த செய்யுள் யாவரும் அறிந்ததே. இது, "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉ முண்பதூஉம் இன்றிக் கெடும்" என்னுங் குறளை ஏற்றிருக்கின்றதென்பதும் பிரசித்தம். எனி னும் சற்று உற்று நோக்கினால், மாவலி அக்குறளை மாற்றி அமைத்துக் கொண்டானே யன்றி அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை யென்பது எளிதில் தெரியலா கும். இக்குறள் வந்திருப்பது 'அழுக்காறாமை' என்னும் அதிகாரத்தில். கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் கெடும் என்பதே அதன் கூற்று. பிறன் ஒரு பேறுடை யப் பொறாமையால் ஈவதை விலக்குபவனும் அவன்சுற்ற மும் உண்பதுவும் உடுபதுவும் இலாகச் சபிக்கப்படுகின் றனர். இங்கு மாவலி ஈவதைச் சுக்கிராசாரியன் விலக்கு வது, பொறாமையாலன்று; தன்னுடைய சீடனும் தன் னால், உறுபொருள் உணர்ந்து காக்கப்பட வேண்டிய வனுமாயிருக்கின்ற மாவலிக்குத் தீது வந்து எய்தா வண்ணம் சுக்கிரன், கொடை புரிதற்கு இடையூறு செய்தான். மாவலிக்கும் இதுதெரியும் எனினும் நோக்கம் எதுவேனும், ஈவதை விலக்குதல் என்னும் செய்கையிலேயே வெறுப்பு மிக உடையவனாய நிலைமை யில் இருந்தானாகையால், 'அழுக்கறுப்பான்' என்பதை அகற்றி 'விலக்கு' என்பதைப் பொதுவாக அமைத்துக் கொண்டனன். காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய் மொழிதல் ஈதன்மறுத்தல் என்னும் ஐம்பெரும் பாவங்க ளில் முதல் நான்கினின் தன்மைகளைமாத்திரம் செப்பி ஈதன் மறுத்தலின் வகையும் தீமையும் இவையென வள் ளுவர் உரைக்கவில்லையாகையால் மாவலி அந்த அற்றத் தைக் கைப்பற்றித் தனக்கேற்றவாறு விளம்பலாயினான். "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்" எனக் குறள் பொறாமை யால் எய்தும் கேட்டினைக் கூறுகின்றதேயன்றி ஈவது விலக்கலைப்பற்றிக் கூறுகின்றதில்லை. அப்படிக் கூறினா லும் அழுக்காற்றினால் விலக்குகின்ற ஒன்றே இக்குற ளின் பொருளிற் குரியது. மற்று, பொறாமை யல்லாக் கால், கொடுப்பதால் கொடுப்போனுக்குத் தீதுவிளையு மென்றும், பெற்றதால் பெற்றவனுக்குத் தீது விளையு மென்றும், பாத்திரம் கெட்டதென்று மற்றவர்களுக்குத் தீது விளையுமென்றும், இன்னபல காரணங்களால் கொடை விலக்கல் நீதியோ மென்னின், எவ்வாற்றானும் எந்நிலையிலும் ஈவதை விலக்குபவர் கொடியோரே ஆவர் என்பான் மாவலி. இது அவனுக்குத் தக்கதே. இரப்ப வன் நோக்கமும் தன்மையும் கருதி எள்ளாது அளித்தல் வேண்டும் என்ற கொள்கையன் அவனாதலால், அதனைத் தடுப்பவரின் நோக்கமும் தன்மையும் எவையேயாயினும் அவர் வெள்ளி என எள்ளிப் பகைத்தற் கொத்தவர் என்று சாற்றுவது அவன்முறை வழுவாது அமைந்த கொள்கையும் கூற்றுமாகும். ஈகை யென்பது ஓர் அறம். இவ்வறத்தினைச் செய்வதால் யாருக்கேனும் தீதுவரும் என்று எண்ணுவது அறிவின்பாற் படுமோ? அறத்தினை ஆற்றுநிற்கும் ஒருவனுக்கு இடையூறு செய்வது, எந் நோக்கத்தால் நேர்ந்ததேனும், அறஞ்சிதைத்தபாவமன்றி வேறு யாவது ஆதல் கூடும்.

இன்னபடி இணையற்றதோர் வகையில் வண்மையைக் கையாள நினைத்த மாவலி,

முடியவிம் மொழியெலா மொழிந்து மந்திரி
கொடியனென் றுரைத்தசொ லொன்றுங் கொண்
அடியொரு மூன்றுநீ யளந்து கொள்கென [டிலன்
நெடியவன் குறியகை நீரி னீட்டினான்.

[இம்மொழியெலாம் முடிவாக மொழிந்து மந்திரி ஸ்தானத்திலிருந்து தனக்கு நன்மை நாடிய சுக்கிரன், "இவ்வாமனன் கொடியவன்' என்று சொன்னசொன் னையுங் கேட்காமல், மாவலி "நீ வேண்டியபடி மூன்றடி நிலம் அளந்து கொள்க" வென, நெடுமாலின் சிறியகை யில் தானநீர் வார்த்தான்]

கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான்,
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே.

[தளத்திலுள்ள நல்ல நீர் வாமனன் கையிற்பட்டதும், பெற்றெடுத்த தாய்தந்தையர்களுமே இகழ்வதற் கொத்த உருவ முடையவனாயிருந்த அக்குறளன், பார்த் திருந்தவர் முதலில் ஆச்சரியங் கொள்ளவும் பிறகு அச் சப்படும்படியும் ஆகாயத்தை அளாவி உயர்ந்து வளர்பவ னாயினான். இது மேன்மக்களுக்கு உதவிய உதவியை ஒத்திருந்தது]

இதுகாறும் மாவலியைக்கொண்டு குறள்களைச் சொல் வித்த கம்பர், "உதவி வரைத்தன்று உதவி, உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்றவோர் குறளி லுள்ள சில சொற்களை எடுத்திங்குக் கோசிகனைக் கூற வைத்தார். 'செய்ந்நன்றி அறிதல்'என்னும் அதிகாரத்தில் நின்று மாற்றுதவியின் அளவின்மையைக் குறிக்கின்ற அக்குறட்பாவின் கருத்தைக் கம்பர் தழுவியுள்ளார் என் றால் அதற்கு வலிந்தல்லது பொருத்தம் காண இயலாது. வாமனன் வளர்ந்ததற்கு எதிர் நிலையுவமை யொன்றுநாடி நான்மறையாளர்க்கைத் தானம் நன்மையில் ஓங்கி வளர் வதொன்றையே இங்குக் கூறுகின்றார்.

இன்னவாறு வாமனனாய் வந்த திருமால் நெடிதோங்கி வளர்தவித் திறத்தினை,

மலருந்தி மேல்விழ மெய்ந்நெரித் தான்வைய
மேழுந்துஞ்சா
மலருந்தி னானங் கன்குற ளாய்மண்
ணளந்தவர்நாள்

மலருந்தி வாக்கதிர் வெண்குடை யாய்முடி
மாமணியாய்
மலருந்தி யாய்த்திருத் தாள்விர லாழி
மணியொத்ததே

[மல்லர்கள் தள்ளி மேல் விழுந்தபோது அவர்களது உடலை நெரித்தவனும், ஏழுலகத்தையும் அயராமல் உண்டு காத்தனவனும் ஆகிய ஸ்ரீரங்கநாதன், குறளுரு வும் எடுத்து வந்து மாவலி தந்த மண்ணை அளக்க வளர்ந்த காலத்தில், விரிகின்ற கதிர்களையுடைய சூரியன், முதலில் அவனுக்கு வளமிருந்த குடைபோல் தோன்றிப் பிறகு அவன் கிரீடத்தின் சிகாமணியாய்ப் பொருந்திப் பிறகு அன்னான் பதும மலர்போன்ற நாபியில் விளங்கி இறுதியில் திருவிக்கிரமப் பெருமானது அழகிய பாதத் தின் விரலொன்றில் அணிந்த மோதிரத்தில் பதித்த இரத்தினம் போன்று இருந்தது]

எனப் பிள்ளை பெருமாள் ஐயங்கார் சூரியனைப் பற்றி அளவிட்டுக் காட்டி முடிப்பதை நினைவிற் கொண்டால் அண்ட மெல்லாம் அளப்பதற்குப் பற்றாத அவ்வடிகளின் உருவமும், அவைகளை உடையவோர் திருமேனியின் வடிவமும் இன்னபடியிருக்குமென ஊகிப்பதற் கொரு சிறிது எளியதாகலாம்.

விரலணிந்த மோதிரத்தின் மணியெனக் கதிரவன் பதிந்த தாளினால்,

உலகெலா முள்ளடி யடக்கி யோரடிக்
கலகிலா தவ்வடிக் கன்பன் மெய்யதாம்
இலைகுலாந் துழாய்முடி யேக நாயகன்
சிலைகுலாந் தோளினாய்ச் சிறியன் சாலவே

[உலகத்தையெல்லாம் தனதிரு அடிகளுக்குள் அடக்கி மூன்றாவது அடிக்கு அளக்குமிடம் இன்மையால் அன்பனாகிய மாவலியின் மெய்யே அதற்கு இடமாயிற்று. ஆதலால், வில் தங்கிய தோள்களையுடைய இராமா, இலை களையுடைய துழாய் முடியுடைய தனிநாயகன் மிகவும் சிறியவன் அல்லவா]

என்று விச்வாமித்திரன் தயரதன் கோக்குரிசிலுடன், "அன்வனனே நீ யென்ப தறியேனோ" என்னும் முன்னத்தால், "சிறியன் சாலவே எனப் புன்னகை யாடி,

உரியதிந் திரற்கிதென் றுலக மீந்துபோய்
விரிதிரைப் பாற்கடற் பள்ளி மேவினான்
கரியவ னுலகெலாங் கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச் செவந்து காட்டவே

[இன்னபடி மாவலியிடத்தில் பெற்ற உலகம் இந்திர னிற்கு உரியதென்று அவனுக்குக் கொடுத்துவிட்டு எம் பெருமான், உலகு எல்லாம் கடந்த தன் இரு பாதங் களும் திருமகள் கரம் வருடச் சிவந்து காட்டும்படி, விரிந்த அலைகளையுடைய பால் கடலில் தன் சயனத்தை யடைந்தான்.]

என்பதோடு மாவலியின் சரித்திரத்தை முடித்து விடு கின்றான்.

சிவந்தது, அண்டத்தை அலகிட்ட தாள்களோ, அவை களை வருடிய திருமகள்தன் கமலக் கரங்களோ அறி கிலோம்.

T. N. சேஷாசலம்.

தமிழ்ப் பாடம் 45.

நளவெண்பா

(872-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

வான நெடுவீதி செல்லு மணித்தேரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூ
நீட்டுவான் செங்கரத்தை நின்று. [கே 113.

பதப்பிரிவு:—வானம் நெடு வீதி செல்லும் மணி தேரோன்தான் அ மடந்தைக்கு தார் வேந்தன் போன நெறி காட்டுவான்போல் இருள் போய் கைவாங்க கான் ஊடே நீட்டுவான் செம் கரத்தை நின்று.

அன்வயம் :—இருள்போய்க் கைவாங்க, வானம் நெடுவீதி செல்லும் மணித்தேரோன்தான், நின்று, தார் வேந்தன் போன நெறி அம் மடந்தைக்குக் காட்டுவான் போல் கானூடே செம் கரத்தை நீட்டுவான்.

பதவுரை

இருள் - இருளானது
போய் - அகன்று
கைவாங்க - நீங்க,
வானம் - ஆகாயமாகிய
நெடு - பெரிய
வீதி - வீதியில்
செல்லும் - (நாடோறும்) போகின்ற
மணி - அழகிய
தேரோன்தான் - தேரையுடையவனாகிய சூரியன்
நின்று - (உதயகிரியில்) நின்றுகொண்டு,
தார் - மாலையை அணிந்த
வேந்தன் - நளவேந்தன்
போன - சென்ற
நெறி - வழியை
அ - அந்த
மடந்தைக்கு - பெண்ணாகிய தமயந்தியிக்கு
காட்டுவான்போல் - (சுட்டிக்) காட்டுகின்றவனைப் போல்
கான் ஊடே - காட்டின் நடுவே
செம் - (தன்னுடைய) சிவந்த
கரத்தை - (கிரணங்களாகிய) கைகளை
நீட்டுவான் - நீட்டினான்.

விரிவுரை :—காலையில் உதித்த கதிரவன்தன் நீண்ட கிரணங்கள் அக்காட்டினுள் பாய்ந்தது, நளன் சென்ற வழியைச் சூரியன் தமயந்திக்குச் சுட்டிக்காட்டினது போல விருந்தது, என்பது இச் செய்யுளின் கருத்து. இதுவும் தற்குறிப்பேற்ற அணி ஆகும். இயற்கையாக நிகழ்கின்ற ஒரு நிகழ்ச்சிக்குக் கவி தன் கருத்திற்கு ஏற்க ஒரு காரணம் குறிக்கவில்லையாகையால் இது ஏதுத் தற்குறிப் பேற்றவணி யன்று. இயற்கையாய் நிகழ் கின்ற ஒரு நிகழ்ச்சிக்குக் கவி இங்கு ஒருவித பயனும் குறிக்கவில்லை; ஆகையால் பயன் தற்குறிப்பேற்றஅணியு மன்று. மற்றுச் சூரியனது கிரணங்களை அவன் கைகள் என்று குறிக்கின்றார். இது, ஒரு பொருளை மற்றொரு பெருள் எனப் பாராட்டுவது ஆகும். ஆகையால் இது, பொருள் தற்குறிப்பேற்ற அணி. கூடிக் களித்த காதலர் உள்ளத்திருந்த உவகையெலாம் இரண்டுபுறத்தே தோன்

றியதெனச் சந்திரன் தோன்றினன், என்போமாகில், சந்திரன் என்னும் பொருளை அது சந்திரன் அன்று உவகை யென்னும் பொருள் என்று குறிப்பதால் இதுவும் பொருள் தற்குறிப்பேற்றவணியே. "நின்முகத்தைத் தாமரை என்றே நினைக்கின்றேன்," என்பதும், முகமாகிய பொருளை முகம் என்று கொள்ளாமல் தாமரை என்னும் வேறொரு பொருளாகக் குறிப்பதால், பொருள்தற் குறிப்பேற்றவணி. ஏதுத்தற்குறிப்பு பயன்தற்குறிப்பு என்னும் வகைகளில் காண்கின்ற நிகழ்ச்சியைப்போல் இவ்வுதாரணங்களில் நிகழ்ச்சி ஒன்றும் குறிக்கப்படாமல், பொருளே ஒன்று வேறொன்றாகக் குறிக்கப் படுவதைக் கவனித்துக் கொள்ளல் வேண்டும்.

இனி, பொருள் தற்குறிப்பேற்றவணியை, உவமையணி யென்றும் உருவக அணியென்றும் மயங்க வேண்டா. மதிவதனம், என்பது உவமை. வதனமதி என்பது உருவகம். நின்வதனத்தை யான் மதியென்றே நினைக்கின்றேன் என்பது பொருள் தற்குறிப்பேற்றம். மதிவதனம் என்னும் உவமை, மதிபோன்ற வதனம் என விரியும். வதனமதி என்னும் உருவகம் வதனமாகிய சந்திரன் என விரியும். தற்குறிப்பேற்றத்தில், வதனமன்று மதியேதானே என்னும் குறிப்புத் தோன்றும். ஆகையால், அதுபோன்றது இது என்பது உவமையென்றும், அதுவே இது என்பது உருவகம் என்றும், அதுவன்று இது என்பது பொருள் தற்குறிப்பேற்றம் என்றும் தெரிந்து கொண்டால் அவைகளுக்குள்ள பேதத்தை எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளலாம்.

செய்தபிழை யேதென்னுந் தேர்வேந்தே யென்ற
[ழைக்கும்
எய்துதுய ரக்கரைகா ணேனென்னும்—பையவே
என்னென்ன தென்னென்னு மிக்கானில் விட்டேகு
மன்னென்ன வாடு மயர்ந்து. 114.

பதப்பிரிவு:—செய்த பிழை ஏது என்னும் தேர் வேந்தே என்று அழைக்கும் எய்து துயர் அ கரை காணேன் என்னும் பையவே என் என்னது என் என்னும் இ கானில் விட்டு ஏகு மன் என்ன வாடும் அயர்ந்து.

பதவுரை.

செய்த - (என்னை நீ காட்டிலே தனியாக விட்டுப் போகத் தகுந்ததாய் நான்) செய்த
பிழை - குற்றம்
ஏது - எதுதானோ
என்னும் - என்று புலம்புவாள்.
தேர் - தேர்களை யுடைய
வேந்தே - அரசனே
என்று - என்று
அழைக்கும் - கூப்பிடுவாள்.
எய்து - நான் எய்திய
துயர் - துயரக்கடலின்
அக்கரை - மறுகரையை
காணேன் - காண இயலாதவளா யிருக்கிறேன்
என்னும் - என்று சொல்லுவாள்,
பையவே - வருத்தத்தால் மெல்ல,
'என் - ஏன்
என்று - என்று
என்னது - (என்னை) கேட்காதது
என் - என்ன காரணம்
என்னும் - என்பாள்.
இ - இந்த
கானில் - காட்டில்
விட்டு - (என்னைத் தனியே) விட்டு
ஏகு - போகின்ற
மன் - அரசனே,
என்ன - என்று
அயர்ந்து - சோர்ந்து
வாடும் - (தமயந்தி) சோர்வடைவாள்.

குறிப்பு:—'என் என்னது என்' என்னுமிது "என்னை அவன் ஏனென்றும் கேட்பதில்லை" என்று வழக்கத்தில் வருகிற வாசகத்தைத் தழுவியுள்ளது.

அல்லியந்தார் மார்ப னடித்தா மரையவடன்
நல்லுயிரு மாசைபுப் போ ஞறுதலும்-மல்லுறதோள்
வேந்தனே யென்ன விழுந்தாள் விழிவேலை
சாய்ந்தநீர் வெள்ளத்தே தான். 115

பதப்பிரிவு:—அல்லி அம் தார் மார்பான் அடி தாமரை அவள்தன் நல் உயிரும் ஆசையும் போல் நாறுதலும் மல் உறு தோள் வேந்தனே என்ன விழுந்தாள் விழி வேலை சாய்ந்த நீர் வெள்ளத்தே தான்.

பதவுரை

அல்லி – குமுதமலர்களால் கட்டிய
அம் – அழகிய
தார் - மாலையை யணிந்த
மார்பன் - மார்பையுடைய நளனது
அடி - பாதங்களாகிய
தாமரை - தாமரைகளின் சுவடு
அவள்தன் - அந்தத் தமயந்தியினுடைய
நல் - நல்ல
உயிரும் - உயிரையும்
ஆசையும் - ஆசையையும்
போல் - போல, (வருவதும் போவது மாகித் தேய்ந்து கலந்து)
நாறுதலும் - அவளுக்குத் தோன்ற,
"மல் - வலிமை
உறு - பொருந்திய
தோள் - தோள்களையுடைய
வேந்தனே - அரசனே"
என்ன - என்று
விழி - (அவளது) கண்களாகிய
வேலை – கடலிலிருந்து
சாய்ந்த - பெருகின
நீர் - நீரின்
வெள்ளத்தே - பெருக்கிலே
விழுந்தாள் - விழுந்தாள்.

விரிவுரை:—இருள் பிரிந்து வெளிச்சம் உண்டானதும் தமயந்திக்கு நளனது அடிச்சுவடுகள் பாழ்மண்டபத்தின் புழுதித் தரையிலும் அதற்கருகு வெளிமண்டபத்திலும் தென்பட்டன. நாறுதல் என்ற பதத்திற்கு மணம் வீசுதல் என்னும் பொருள் தவிர, தோன்றுதல் அல்லது விளங்குதல் என்னும் அர்த்தமும் உண்டு. இங்கு அச்சொல் 'தோன்றுதல்' என்னும் பொருளில்தான் வந்திருக்கின்றது. நளனுடைய அடிச்சுவடுகள் அவள் கண்களிற்பட்டன. தோன்றிய அவ்வடிச் சுவடுகள் தமயந்திக்கு அவளுடைய உயிரும் ஆசையும் போலவே தோன்றின, ஆதலால் அவள் 'ஐயகோ அரசனே' என்றழுது விழுந்தனள், என்று சொல்கின்றார் புகழேந்தி. எந்த விதத்தில் அவ்வடிச்சுவடுகள் அவளது உயிரும் ஆசையும் போல் இருந்தன வென்பதையும், அவைகளைக் காண அவள் விழுந்தழிவானேன் என்பதையும் உணர்ந்தாலன்றி இப்பாட்டின் அழகை அனுபவிக்க இயலாது.

நளன் இவளைவிட்டு நேராகப்போய்விடவில்லை, "ஒருகால் மீளும், புகுந்து ஒருகால் மீண்டு ஏகும்," ஆதலால்

அடிச்சுவடுகளும் சிறிதுதூரம் மண்டபத்தைவிட்டு அகன்று போகின்றவைகளாகவும் பிறகு அவை திரும்பி மண்டபத்தை நெருங்கி வருவனவாகவும் இருந்திருக்கும். அவ்வாறு போகின்ற அடிச்சுவடுகளை அவள் நோக்கித் தொடரும்போது தன்னைவிட்டுஅவன்போயே போய்விடுகின்றானே என்ற துயரக்கவற்சியால் அவளுக்குத் தன்னுடைய உயிரே போவதுபோல் தோன்றியது. பிறகு, அவ்வடிச் சுவடுகள் திரும்பிவருகின்ற குறியைக் கண்டவுடன், "எனது நாயகன் போய்விடவில்லை. இங்குத்தான் எங்கேயோ சென்று வந்துளான். ஆகையால் அவனை நான் காணலாகும்" என்னும் ஆசை வந்திருக்கும். எனவே நளன் போனகுறி தோன்றியபோது தமயந்தியின் உயிர் போவது போலவும், அவன் வந்த குறி தோன்றியபோது அவளுக்கு ஆசை வருவது போலவும் அவ்வடிச் சுவடுகள் அமைந்திருந்தன. எனவே, "(அவ்வடிச் சுவடுகள்) அவள்தன் நல் உயிரும் ஆசையும் போல்—போவதும் வருவதுமாய் — தோன்றுதலும்" எனச் சில சொற்கள் வருவித்து நிரணிறையாகப் பொருள் கொள்ளவேண்டும்.

இனி, முன்சொன்ன கருத்தோடுகூட இன்னொரு பொருளும் சேர்த்துக் கொள்ளலாம். அது, "தமயந்தியின் உயிரும் ஆசையும் கலந்து அழிந்திருப்பது போலவே, பலமுறை வருவதும் போவதுமாயிருந்த அவ்வடிச் சுவடுகள் கலந்து அழிந்திருக்கக் கண்டாள்" என்பதாம்.

இப்படிப் பலமுறை அகல்வதும் நெருங்குவதுமா யிருந்த அவ்வடிச்சுவடுகளைக் கண்ணுற்ற தமயந்தி, தன்னை விட்டுப் போவதற்கு எளிதில் நளன் உடன்படாது "ஆயர் கொணர்ந்த அடுபாலில் தோயல் கடைவார் தம் கைபோலும்" அவன் மனம் தவித்த தன்மையை உணர்ந்து கொண்டாள். உணரவே, தன்பாலுள்ள அன்பினால் விட்டேகிய நளன் ஏகுங்கால் பிரியத்தரியாது பட்டதோர் கொடுந்துயரை நினைத்து அவனுக்கு இரங்கி, "மன்னவோ, என்னைப் பிரிந்தகல நீ என்ன பாடுதான் பட்டாயோ" வென்று அழலாயினள்.

குறிப்பு:—ஆகுபெயர்களின் இலக்கணமும், அவைகளின் விதங்களிற் சிலவற்றையும் முன் பல இடங்களில் சொல்லியிருக்கின்றோம் (50, 429, 468, 592, 610 வது பக்கங்கள்). நளனது தாமரைபோன்ற அடிகள் தென்பட்டன. என்றிருப்பதில், அடி என்பது பாதம் என்னும் அர்த்தத்தில் வரவில்லை. தமயந்தி பார்த்தது நளனுடைய பாதங்களை அன்று. பாதங்கள் பட்டதால் உண்டான சுவடுகளையே பார்த்தாள். ஆதலால், அடி என்னும் சொல், அதனால் உண்டான சுவட்டிற்கு ஆகி நிற்கின்றது. எனவே இது ஆகுபெயர். சுவட்டிற்குக் காரணமாயிருந்தது கால். எனின் காரணமாயிருந்த பாதம் என்னும் பொருளின்பெயர் அதனால் விளைந்த காரியமாகிய சுவட்டின் பெயராக இங்கு நிற்கின்றது. இப்படிக் காரணத்தின் பெயர் காரியத்திற்கு ஆகுமானால் அதற்குக் காரண ஆகுபெயர் என்பது பெயர். பொருளாகுபெயர், குணவாகுபெயர், சினையாகுபெயர், இடவாகுபெயர், உவமையாகுபெயர், முதலிய ஆகுபெயர்களைப்பற்றிச் சொல்லி யிருக்கின்றோம். அவைகளோடு இக் காரண ஆகுபெயரையும் சேர்த்துக் கொள்ளவும்.

வெறித்த விளமான்காள் மென்மயில்கா ளிந்த
நெறிக்க ணெடிதூழி வாழ்வீர்—பிறித்தெம்மைப்
போனாரைக் காட்டுதிரோ வென்னப் புலம்பினாள்
வானாடர் பெற்றிலா மான் 116.

பதப்பிரிவு:—வெறித்த இள மான்காள் மெல் மயில்காள் இந்த நெறிக்கண் நெடிது ஊழி வாழ்வீர் பிறித்து எம்மை போனாரை காட்டுதிரோ என்ன புலம்பினாள் வான் நாடர் பெற்று இலா மான்.

அன்வயம்:—வான்நாடர் பெற்றுஇலா மான், "வெறித்த இளமான்காள், மென் மயில்காள், நெடிது ஊழி வாழ்வீர், எம்மைப் பிறித்து இந்த நெறிக்கண் போனாரைக் காட்டுதிரோ" என்னப் புலம்பினாள்.

பதவுரை.

வான்நாடர் - தேவலோகத்தி லிருக்கின்ற இந்திரன் முதலாயினோரும்
பெற்று இலா - அடைய முடியாத
மான் - மான்போன்ற தமயந்தி,
"வெறித்த - மருண்ட
இள - இளமையான
மான்காள் - மான்களே,
மெல் - மெல்லிய
மயில்காள் - மயில்களே,
நெடிது - நீண்ட
ஊழி - ஊழிகாலமட்டும்
வாழ்வீர் - வாழ்வீர்களாக,
எம்மை - நம்மை
பிறித்து - வேறாக விட்டு
இந்த - இந்த
நெறிக்கண் – வழியில்
போனாரை - போனவரை
காட்டுதிரோ - உங்களால் காட்ட இயலுமோ"
என்ன - என்று
புலம்பினாள் - அழுதாள்.

விரிவுரை:—குழல்விரி கோலமாய் அழுதுழல்வாளைக் கண்ட மான் மயில் முதலியன அவள்பால் வந்து சூழ்ந்துகொண்டு இரங்கி நிற்கவே தமயந்தி, துயரத் தொடர்பினால் அவைகளோடு உறவுபாராட்டி, "எம்மைப் பிறித்துப் போனாரை' என்று சேர்த்துச் சொல்கிறாள். 'எம்மை' என்பது இங்கு 'நம்மை' என்னும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பொருளது. மான்காள், மயில்காள், இந்த நெறிக்கண்" என்று கேட்கவந்த இவள் அவை தன்பால் காட்டும் பரிவால் மனமுருகி, "நெடுதூழி வாழ்வீர்' என இடையே ஆசீர்வதித்து, "பிறித்தெம்மைப் போனாரைக் காட்டுதிரோ" என மேல் தொடர்ந்து கூறுகின்றாள். காட்டுதிரோ, என்பதிலுள்ள, ஓகாரம் வினைப்பொருளில் வந்திருக்கின்றது. காட்டுங்கள் என்று இரக்கப் பொருளில் ஓ சேர்ந்து வந்ததாகவும், அப்படிக் காட்டுவீர்களானால் நெடுதூழி வாழ்ந்திருப்பீர், என்று தமயந்தி கூறியதாகவும் கொள்ளாமல், கைம்மாறு கருதாமலே அன்புப் பெருக்கினால் அவள் அவைகளை ஆசீர்வதித்தாள் என்று கருதுவதே தமயந்தியின் தன்மைக்குத் தக்கதாகும்.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்
ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணக்கரும் ஆகிய
ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றிய
கந்தபுராண வெண்பா
ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.
இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.
விலை ரூ. 4-8-0. வி. பி. சார்ஜ் வேறு.
மானேஜர், கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

காந்திமதி என்னும்

காந்தார நாட்டுக் கட்டழகி.

(856-வது பக்கத் தொடர்ச்சி)

35. படகின் செலவு.

பரிதியின் இளங்கதிர் பாயும் வேளையில் விரிதிரைப் பொற்புனல் விளங்கு மாற்றின்வாய்ப் பெருந்தகைக் குரிசிலும் பெண்மைக் கரசிய ரிருவரும் ஒன்றிய உயிரோ டேகினர். படகுதான் புறத்தொரு வெள்ளம் பாய்ந்துகீழ்க் கிடவத கைவயின் இன்பக் குன்றிய கடலினுள் யாவரும் களித்து மூழ்கிய தடங்கரை கண்டிடத் தாழும் நீங்கினர். இன்னோர் படர்நெறி இரு மருங்கும் இயற்கைச் செல்வம் வனப்பொடு திகழ்ந்தது. இளமாச் சோலைகளும் மலர்மணப் பொழில்களும் செய் குன்றுகளும் சிறு வாவிகளும் நிறைந்திருத்தலால், அவ் வழகிய சூழல்களில் தானும் எய்தி இன்புற் றுலவ அவா வியதென்னக் குண்டலினி நதியும் முயன்றதொத்தது அலையொடு கரையினிற் புரண்ட செய்கையே. எங்குமாய் யாவுமாய் ஆயங்கொரு தனிப்பரம் பொருளை போல, அழகெனும் அத்திப்பியத் தோற்றமும் அங்குப் பூவென மலரும் ஒருபால், வண்டெனப் பாடும் ஒருபால், குயி லெனக் கூவும் ஒரு சிறை, மயிலெனஆடும், நறவென இனிக்கும், மணமெனக் கமழும், மானெனத் துள்ளும், காற்றென உலவும், தருவென அசையும், தளிரென மினி ரும், புன்னுனித் திரண்ட தண்ணீர்த் துளியும் அம்மே சேணிடை நெடிது ஓங்கி விண்ணெனும் கிழியில் தீற்றியவோர் புகையின் படமெனத் தேன்றுமத் தொடர் வரைக் காட்சியும் அழகின் குவியலே யாம்.

அல்லலும் அலைப்புமின்றி அழகின் உவகையால் அமை தியுற்ற பொழிலிலும் மணற்கரையிலும் புற்றரையிலும் தைத்த கண் வாங்கப்பெறாது உள்ளமும் அவ்வழி ஓடிப் பாய அனைவரும் அப்படகினில் நெடுநேரம் தம்முளே யாதும் உரையாமற் செல்வாராயினர். இவ்வாறு செல் லும் நெறியில், அந்த யாற்றின்பாங்கர் உளவாம் வள மிகு ஊர்க்கண் வைகிய நன்மக்கள் பலர், விடையன புருடரும் பிடியெனும் மடவாரும், பொழில் புகுந்து மலர்நலம் துய்க்கவும் நீர்குடைந் தாடவும் வந்து எய்தி னர். இன்னவர்களில், அழகு திகழு மேனியர், மணித் திரள் பூணினர், பொன்பயில் ஆடையர், அன்பொழுகு கண்ணினர், காதலால் களித்த சிந்தையர், சிவிரியும் குடலையும் சுண்ணப் புட்டிலும் பஞ்சரத் தத்தையும் பூவையும் ஏந்திவந்து இழைத்த செயல்களும் இயம்பிய சொற்களும் அரசப் படகினின்று கண்டுகேட் டகமகிழ்ந்த இளவேந்தன் முதலாயினோர் மனங்களைப் பூரிக்கச் செய் தன. குழுமிய அவ்வழகின் தொகுதியில் நிகழ்ந்த சில காட்சிகளையும் அவைகளிற் சிலவற்றின் மறை பொரு ளையும் இளவரசன் தன்னோடமர்ந்த மங்கைமார்க்குக் காட்டி விளக்கி வருவா னாயினன். இதுபற்றி அவர் தமுள் நயமொழி சில பயிலுஞ் செவ்வியும் நேர்ந்தது.

"தந்தத்தின் பதுமை யொப்பாள் ஒருத்தி, புனற் சிறை எய்தவருவாள் பூஞ்சிலம்பு குயிற்றிய இனமணி எற்றலால் கதிரவன் கிரணம் பைங்கிறக் கொழுந்தாய்ச் சிதறி முன் மணலிற் படர்தலும், இரலைக் கன்றொன்று புல்லென மேய்ந்து வெற்றுவாய் மெல்லக்கண்டு அன் னுன் தோன்றின்ற நலக்கிளி சுருவதைப் பாரீர்" எனச் சித்ராங்கன் தன்னரும் மாதரார்க்குக் காட்டினன். இத னைக் கேட்ட மாலினியாகும் நல்லாள், "ஆம், யானுங் கண்டேன். ஆயினும் என்! அரசே, "பேதைமை பிறரிற் கண்டு சிரிப்பவர் தாமும் ஆங்கே மூதறி வுள்ளா ரென்று முழுங்குதற் கொத்தா ராகார்.மாதுரங் களிக்த தீஞ்சொற் பாவையின் வாயைத்தாவும் கோதிய தந்தக்கிள்ளை கொவ் வையின் கனியா மென்றே," என்று நவிலவும், மந்தா கினி, "நின்னின மானங்காக்க நினைத்தனை போலும் தங்கை, பன்னினை மானைநக்க பைங்கிளி மடமைச் செய்தி. என்னினி யுரைப்பேன், இந்த மொன்மொழித் தத்தை தாவும் மன்னலங் குலத்ததன்றோ மழலையின் உறவிருமே" என்று மானைப் பரிகசித்த கிளியைப் பரிக சித்த மாதினைப் பரிகசிப்பான்போல் பாராட்டினன். இரு வர்தம் உரையும் கேட்டு இனநகை எய்திய சித்ராங்கன், "நண்டனை, மாலினி, நின் கூற்றின் வாய்மையை? வரிவையை ஏசிச் சொன்னாய், இவள் நகைக்கு இலக்காய் நின்றாய்," என்றலுங்கால் இதுகாறும் வாளாவிருந்த காந்திமதி, "அற்றன்று, எனதிறைவ, மருண்ட விழியா லும் மழலைமொழியாலு மன்றி மடமைத் தன்மையா லும், நவ்வியும் வன்னியும் தன்மாபு நிற்கின்ற நேர்மை யை மாலினி தெரிவிக்கின்றாள்," எனப் பரிந்துகூறவே, இதனால் தன் தலைவி மந்தாகினி இழுக்குற்றாள் என மதித்த கயற்கண்ணி, "விழியும் மொழியும் இருப்பினும், இத்துணைச் சதுரப்பாடு சூழ்ந்து பேசவல்ல இவள் மடக் கிளியும் மானுஞ் சேர்க்க மாதரார் இனத்தைச் சேரான்," என வஞ்சினம் முடித்துக் கொண்டாள். இவ்வாறு இவள் கூறியதற்கு மனம் நொந்து காந்திமதி முகம் விளர்க்கவே, மந்தாகினி வெகுண்டு, "கயற்கண்ணி, மடமையே கருவியாய் அளந்துகண்டால் நின்னின் பெண்மைப் பொதிசுமப்பார், வேறிலர், திண்ணம்...... உயர்ந்தோர் உரைக்கிடையே ஓராது புகுந்திடாதே" எனச்சாற்றினள். அவளும்,"தன்னையே தானுங் காவாள், என்னையுங் காக்க வொட்டாள், என்தலைவி" எனத்தன் னுளே எண்ணிக்கொண்டு மறுபுறந்திரும்பிப் பார்க்கப் படகினை ஓட்டுவோர், "மங்கையர் நால்வர் சேர்ந்தால் விளைந்தது கலகந்தானே," எனத் தம்முளே சிந்தித்து அரும்பிய முறுவலை அடக்கிக்கொள்பவர்போல் இவள் கண்களுக்குத் தோன்றினர்.

உண்மையிலேயோ படகினை உந்தும் அவ்வான்கள்எத னையும் நினைத்துச் சிரிக்க முயன்றவரல்லர். எம் மருங் கும் எப்பொருளிலும் எவ்வொலியிலும் ஒளியிலும் நிலை யிலும் ததும்பித் திருநடம் புரிந்த அழகிற்கு அவர்களும் ஈடுபட் டிருந்தாராகையால் அவ்வழகின் பிரதி பிம்பமாய் அவர்தம் உள்ளத்தில் தோன்றிய உவகையே அவர் முகத்தில் நிழலெனத் தோன்றியது. அழகின் உணர்ச்சி, முகத்திலே ஒளியாகக் காண்பது மல்லாமல் இன்னிசை ஒலிவடிவமாகவும் தன்னைக் காட்டிக் கொள்ளும். ஓடப் பாட்டொன்று பாடுதற்கு அவர் சிந்தித்து எதனைத் துவக்குவது என்று தம்முள் பேசிக் கொண்டனர். அப்பொழுது ஒருவன் "பாடியும் தள்ளியும் இவ்வோடத் தைக் கொண்டுபோய் ஊர் சேர்க்க எனக்கு இட்டமே இல்லை. இப்படகை இங்குக் கவிழ்த்துவிடவே என் கருத்து நாடுகின்றது. செய்யட்டுமோ? எனின் பேரழகு வாய்ந்த இவ்விடங்களில் நாம் சிறிதுகாலம் தங்கி மாலை யில் நகர்க்கண் செல்லாகுமே," என்றானேனும், ஓடத் தைக் கவிழ்த்துக்கொண்டு அச்சூழல்களின் அழகைக் காண்பதினும் ஓட்டிக்கொண்டு காண்பதே தக்கது என மற்றவர் கருதியதால், உலர்ந்திருந்த ஆடையோடு இளவரசனும் மற்றனோரும் ஏகலாயினர்.

T. N. சேஷாசலம்.

64 பக்கம்

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இனாம். டெலிபோன் நெ. 3311.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநுட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. 400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. 1-8-0 (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ	அ.		ரூ	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,

மங்கமாரி வீதி, இரங்கூன்

கம்பராமாயணப் பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர் ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்பிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலாநிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத் திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலாநிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

ஆந்திர தேசத்தில் வெள்ளத்தினுல் ஏற்பட்ட சேதக் கஷ்ட நிவாரண நிதிக்குக் கவர்னர் ஜெனரல் ரூபா 250 கொடுத்திருக்கிறார்.

***

சென்றவாரம்சென்னைக் கவர்ன்மெண்டு ஆலோசனைச் சங்கத்தில் பாரதியின் பாடல்கள்மேல் ஏற்பட்ட தடையை நீக்கி விடுவதாக முடிவு செய்திருக்கிறதாய்த் தெரிகிறது.

***

காசியில் பாகீரதி என்ற ஸ்திரி டாக்டர் இறந்து போவதற்குச் சில தினங்களுக்குமுன் தன் சொத்துகள் எல்லாவற்றையும், பாங்கியிலிருந்த 45000 ரூபாயையும் காசி சேவை சமாதிக்குக் கொடையாக எழுதி வைத்தார்.

***

சென்னை இருப்புப் பாதையில் வெள்ளத்தினுல் சேதப்பட்ட பாகங்கள் இந்த மாதம் பத்தாம்தேதி யளவில் பழுது பார்க்கப்பட்டு வண்டிகள் போவதற்குத் தயாராகிவிடும் என்று தெரிகிறது.

***

இங்கிலாந்தில் சென்ற வாரம் நடந்த முனிசிபல் தேர்தல்களில் பலவிடங்களிலும் தொழிலாளர் கட்சியாரே அதிகமாகத் தெரிவு செய்யப்பட் டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

***

இங்கிலாந்தில் ரஸ்தாக்களில் போக்குவரத்து வண்டிகள் லைசென்சஸ் மூலம் கிடைத்த வருமான வரும்படி 9 மாதங்களில் 23000000 பவுன். சூன் சூலை ஆகஸ்டு ஆகிய மூன்று மாதங்களில் 76000 புதிய மோட்டார்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட் டிருக்கின்றன.

***

பம்பாய் ஆலைகளில் சிறு கலவரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆலைவேலை நிறுத்த விசாரணைக் கமிட்டி எல்லா ஆலை அதிகாரிகளையும் 1925-26-27ம் வருஷங்களின் வரவு செலவு கணக்குகளையும், மூன்று வருஷங்களில் ஜனவரி மாதத்தில் கொடுத்த கூலியையும் தெரிவிக்கும்படி கேட்டிருக்கிறது.

***

புதிய இந்திய பொக்கிஷ மெம்பர் சென்ற இரண்டாம் தேதி பம்பாயில் வந்திறங்கினுர். பத்திரிகை நிருபர் ஒருவர் ரிசர்வ் பாங்கியைப்பற்றி இவருடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்படி கேட்டதற்குத்தான் இந்திய நிலைமைகளைப் பற்றி முற்றுய்த் தெரிந்து கொள்வதற்கு முன் இந்த விஷயத்தைப் பற்றி ஒன்றும் முடிவாய்ச் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டார்.

***

லாகூரில் சென்ற மாதம் 30-ந்தேதி ஸைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் சேர்ந்த தலைவர்களைப் போலீசார் தடியால் தாக்கியதில் காயம்பட்ட லாலாஜியின் தேக நிலை சௌக்கியம் அடைந்துவிட்டது லாலாஜிக்கு அவருடைய தைரியத்தைப் பாராட்டியும் அவர் காயப்பட்டதைப் பற்றி வருத்தத்தைத் தெரிவித்தும் தேச முழுவதிலிருந்தும் தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

***

புதுக்கோட்டை ராஜியத்திற்கு ராஜாவாக ராஜகோபாலத் தொண்டைமான் என்பவரை, இந்திய கவர்ன்மெண்டார் தெரிந்தெடுத் திருக்கிறார்கள். இவர் திருமலை ராயத் தொண்டைமானின் சந்ததி. காலஞ்சென்ற ராஜாவின் அவுஸ்திரேலிய மனைவியின் பிள்ளையாகிய சிட்னி மார்த்தாண்டம் என்பவரும் அவர் சகோதரி பிள்ளை ஒருவரும் ஆகிய மற்றிருவர் இவ்விராச்சியத்துக்கு ராஜாவாக வருவதற்கு உரிமையுள்ளவர்கள்.

எட்னு என்னும் எரிமலையில் இருந்து புகையும் லாவாவும் வந்துகொண்டிருக்கின்றன. சுற்றுப் பக்கத்திலிருக்கிற கிராமங்களில் இருப்பவர்கள் அவ்விடங்களை விட்டு நீங்கிவிட்டார்கள்.

***

டில்லியில் கூடியிருக்கிற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஸ்ரீமான் எஸ் ஸ்ரீநிவாச ஐயங்காருக்கும் பண்டிதர் நேருவுக்கு மிடையில் நடந்து கொண்டிருந்த பூரண சுயேச்சைவாத விஷயத்தைப்பற்றி ஒரு சமாதானம் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இந்தியாவின் லக்ஷியம் பூரண சுயேச்சை என்றும் நேருக் கமிட்டி யாதாஸ்து இதைப் பெறுவதற்கு ஒருபடி என்றும் ஒத்துக்கொண் டிருக்கிறார்கள்.

***

ஷாங்கைக்கும் ஹான்கெனக்கு மிடையில் ஒரு சீன கப்பலில் கடற்கொள்ளைக் காரர்கள் பிரயாணிகளைப் போல் சென்று நடுச்சமுத்திரத்தில் கப்பல் அதிகாரிகளையும் வேலைக் காரர்களையும் துப்பாக்கியால் சிலரைச் சுட்டும் மற்றவர்களைப் பிணித்தும் விட்டுவிட்டு முதல் வகுப்புப் பிரயாணிகள் அறைகளில் புகுந்து கொள்ளையடித்து 15000 டாலர் மதிப்புள்ள கொள்ளையோடு ஒரு ஸ்டீம் லாஞ்சில் ஏறிப் போய்விட்டார்கள்.

***

முப்பதாம் தேதி நடந்த விஷயங்களைப் பற்றி லாலாஜி ஒரு கடிதம் பத்திரிகைகளுக்கு எழுதிப் போலீசார் அபத்தமாகச் சனங்கள்மேல் சுமத்தியிருக்கிற குற்றம் சுத்தப்பொய் என்றும், சனங்கள் மிகவும் அமைதியாயும் பொறுமையாயும் இருந்ததுமல்லாமல் சட்டத்துக்கு விரோதமாக ஒன்றும் செய்யவில்லை யென்றும் அவ்விதம் ஏதாவது நடந்திருந்தால் கவர்ன்மெண்டார் தைரியமிருக்குமாகில் தன் பேரில் பிராது தொடுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்.

***

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரசாதிபதி தேருதலில் கூவர் என்பவர் சித்தியடைவார் என்று தெரிகிறது. இவருக்கு எதிரியாய் இருப்பவர் சிமித் என்பவர். இவர் மதுவிலக்குக்குச் சேராதவர். கூவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மதுபானம் அறவே ஒழிய வேண்டுமென்ற விருப்பமுள்ளவர். பிரசாதிபதி கூலிட்ஜ்தான் இந்தப் பதவியைக் கூவரிடம் ஒப்படைப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாயும் இந்தப் பதவி அவரிடம் வருவதால் அது தகுதியானகைகளில் இருக்குமென்றும் கூவருக்குத் தெரிவித்திருக்கிறார்.

***

சர் ஒற்றோ பீற் என்பவர் வாதநோய் சிகிச்சைக்காக 10,000 பவுன் தானம் செய்திருக்கிறார். பிரிட்டிஷ் ரெட்கிறாஸ் சொசையெட்டியார் இந்தப் பணத்தைக் கொண்டு இங்கிலாந்து முழுவதும் இந்த நோயை நிவர்த்தி பண்ணுவதற்கான ஏற்பாடுகள் செய்வார்கள். இவர்கள் இந்தவேலைக்கு 40,000பவுன் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

***

மகாத்மாகாந்தி பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அவர் இந்திய இராஜ்ய கிளர்ச்சிக்குத் தலைமை வகிப்பதைப் பற்றிக் கேட்டபோது, தான் திரும்பவும் தலைமை வகிப்பதற்குத் தயாரா யிருக்கிறதாகவும் அப்படி அவர் செய்வதற்குமுன் தேசம் தன்னைத் தலைமை வகிப்பதற்கு அழைக்க வேண்டுமென்றும் அவ்விதம் அழைக்கும் போதும் பொதுஜனங்கள்மீது தனக்கு நிச்சயமான சக்தியிருப்பதாய்த் தெரியவேண்டும் என்றும்சொன்னுர். இப்போதுஇருக்கிற நிலைமையைப் பார்த்தால் தான் அவ்விதம் தலைமை வகிக்கத்தக்கதான நிலைமையில் ஜனங்கள் இருப்பதாகத் தெரியவில்லை; மேல் தன் காலத்தில் அவ்வித நிலை ஏற்படுமோவென்பது சந்தேகம். தான் தலைமை வகிக்கமுடியாதுபோனுலும் இப்போதுதலைமை வகிக்கக் கூடிய மற்றொருவர் இருக்கவேண்டும். அவ்விதம் இல்லாதுபோனுல் அது மிகவும் வெட்கத்துக் கிடமான விஷயம் என்றும் கூறினுர்.

189028

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"
11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)